சமிதி கட்டளைச் சட்டத்தின் (அதிகாரம் 123) ஏற்பாடுகளுக்கமைய "1986.06.25" ஆந் திகதி பதிவு செய்யப்பட்ட "சீமாசஹித தாம்புகல சர்வோதய சிரமதான சமிதிய" எனும் சமிதி இயங்காமல் இருப்பதாக நியாயமான காரணங்களைக் கொண்டு அறிய முடிகின்ற படியால், 2017.10.30 ஆந் திகதி "சீமாசஹித தாம்புகல சர்வோதய சிரமதான சமிதிய" எனும் பெயர் திணைக்களத்திலுள்ள பதிவேட்டிலிருந்து நீக்கப்பட்டு. சமிதி கலைக்கப்பட்டுவிடும் என்பதற்கான அறிவித்தலை சமிதி பதிவாளர் தூவலகே நிஹால் ரஞ்ஜன் சிறிவர்த்தன ஆகிய நான் சமிதி கட்டளைச் சட்டத்தின் 6 (3) ஆம் பிரிவின் கீழ் இத்தால் வழங்குகின்றேன்.

சமிதி பதிவாளர்.

கம்பனிகள் பதிவாளர் திணைக்களம்,
இல. 400, டி. ஆர். விஜேவர்த்தன மாவத்தை,
கொழும்பு 10,
2018, பெப்புருவரி 03.

03-21

---

எஸ் - 1062

### சமிதி கட்டளைச் சட்டம் (அதிகாரம் 123)

*6(1) ஆம் பிரிவின் கீழான "சீமாசஹித மாஎலிய சாம சர்வோதய சிரமதான சமிதிய" இன் பெயரை நீக்கி விடுவதற்கான அறிவித்தல்*

சமிதி கட்டளைச் சட்டத்தின் (அதிகாரம் 123) ஏற்பாடுகளுக்கமைய "1986.07.07" ஆந் திகதி பதிவு செய்யப்பட்ட "சீமாசஹித மாஎலிய சாம சர்வோதய சிரமதான சமிதிய" எனும் சமிதி இயங்காமல் இருப்பதாக நியாயமான காரணங்களைக் கொண்டு அறிய முடிகின்ற படியால், 2017.10.30 ஆந் திகதி "சீமாசஹித மாஎலிய சாம சர்வோதய சிரமதான சமிதிய" எனும் பெயர் திணைக்களத்திலுள்ள பதிவேட்டிலிருந்து நீக்கப்பட்டு. சமிதி கலைக்கப்பட்டுவிடும் என்பதற்கான அறிவித்தலை சமிதி பதிவாளர் தூவலகே நிஹால் ரஞ்ஜன் சிறிவர்த்தன ஆகிய நான் சமிதி கட்டளைச் சட்டத்தின் 6 (3) ஆம் பிரிவின் கீழ் இத்தால் வழங்குகின்றேன்.

சமிதி பதிவாளர்.

கம்பனிகள் பதிவாளர் திணைக்களம்,
இல. 400, டி. ஆர். விஜேவர்த்தன மாவத்தை,
கொழும்பு 10,
2018, பெப்புருவரி 03.

03-20

### பிரதேச அபிவிருத்தி வங்கி

*2008 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க பிரதேச அபிவிருத்தி வங்கி சட்டத்தின் 40 ஆம் பிரிவினால் வலுவாக்கப்பட்ட 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிச் சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கடன் அறவிடுதல் விஷேட ஏற்பாடுகளின் பிரகாரம் பிரதேச அபிவிருத்தி வங்கியின் பணிப்பாளர் சபையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம்*

ரி. ட. கருணாரட்ண பெரேரா /ரி. லசித் லக்மால் பெரேரா
சேமிப்பு கணக்கு இலக்கம் 708010103181
கடன் கணக்கு இலக்கம் 708059600510

2017.07.25 ஆந் திகதி நடைபெற்ற பிரதேச அபிவிருத்தி வங்கியின் பணிப்பாளர் சபையின் 2017/09 ஆம் இலக்க கூட்டத்தில் கீழ்கண்டவாறு விஷேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

"பிரதேச அபிவிருத்தி வங்கியின் சார்பில் இல. 68, சட்டத்தரணிகள் கட்டிடத் தொகுதி, குமாரதுங்க மாவத்தை, குருநாகல முகவரியை சேர்ந்த சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிசுமான டபிள்யூ. ஹேவாபதிரண அவர்களினால் சாட்டுதல் செய்யப்பட்ட 2014.12.08 ஆந் திகதியிடப்பட்ட இலக்கம் 9668 உடைய ஈட்டுமுறியின்படி வங்கிக்கு வருமதியாக உள்ள பணம் செலுத்துதல் கடன்படுனர்கள் எனக்குறிப்பிடப்படும், தொடம்கஸ்லந்த, லிஹினவெஹெர, ரத்விட வீதி, " சிரிலக் கொவூமோல" எனும் முகவரியில் வசிக்கும் தலகலகே தர்மசிரி கருணாரட்ன பெரேரா (தேசிய அடையாள அட்டை இலக்கம் 562711678 V) அதே முகவரியில் வசிக்கும் தலகலகே லசித்த லக்மால் பெரேரா (தேசிய அடையாள அட்டை இலக்கம் 911173255 V) ஆகியோர்களினால் கைவிடப்பட்டுள்ளதனால் அவ் ஈட்டுப்பத்திரத்தின்படி பிரதேச அபிவிருத்தி வங்கிக்கு வருமதியாக உள்ள ரூபா நாற்பத்து ஆறு இலட்சத்து ஆறாயிரத்து தொளாயிரத்து தொண்ணூற்று ஏழு (ரூபா 46,06,997) கடன் தொகை மற்றும் 2017.05.22 ஆந் திகதி முதல் ஏலவிற்பனை திகதி வரை 14% வருடாந்த வட்டி வீதத்திலும் பெறவேண்டிய முழு வட்டி, வரி, விளம்பர செலவு உட்பட ஏலவிற்பனை செலவுகளுடன் மேலும் சட்டரீதியாக செலவுகள் ஏதேனும் வங்கிக்கு வருமதியாக இருப்பின் அவற்றையும் சேர்த்து அறவிடுவதற்கு கடனாளிகளினால் 9668 ஆம் இலக்க ஈட்டு முறியின் கீழ் பிரதேச அபிவிருத்தி வங்கிக்கு அடமானமாக வைக்கப்பட்டுள்ள கீழே அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள ஆதனங்களை பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டவேண்டும். ஆதனத்தின் விபரங்கள் கீழே அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ளது.

மேலும் அவ் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள ஆதனங்களை ஏலவிற்பனை செய்யும் அதிகாரம் கண்டி, டொரிங்டன் வீதி, இலக்கம் 24 எனும் முகவரியில் இருக்கும் ஷொக்மன் அன்ட் சமரவிக்ரம நிறுவனத்துக்கு வழங்கப்பட்டுள்ளது.".

#### அடகு வைக்கப்பட்டுள்ள ஆதனங்களின் விபரங்கள்

1. வடமேல் மாகாணத்தின், குருநாகல் மாவட்டத்தில் ஹிரியால பற்றில் ரிதீகம பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட,

ரிதீகம பிரதேச சபை எல்லைக்குள், மேல் இருபத்து இரண்டு கிழக்கு கோரளையில் இலக்கம் 553 கிராம அலுவலர் பிரிவில், லிஹினிவெஹெர கிராமத்தில் அமைந்துள்ள "கட்டுபலாஹேன T.P.426250" எனும் காணிக்கு உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் டபிள்யூ. ஏ. குணதிலக என்பவரினால் 2009.11.17 ஆந் திகதி அளந்து வரையப்பட்ட 5226 ஆம் இலக்க வரைபடத்திற்கு அமைய பிரித்து வேறாக்கப்பட்ட துண்டு இலக்கம் 05 உடைய வடக்கு : சிறு ஓடையையும்; கிழக்கு : இலக்கம் 1922 வரைபடத்தில் இலக்கம் 02 எனும் காணித்துண்டும் இலக்கம் 03 மற்றும் 04 காணித்துண்டுகளையும்; தெற்கு : ஹெண்டி பெர்ணாண்டோவிற்கு உரிமையான காணியையும்; மேற்கு : ஹெண்டி பெர்ணாண்டோவிற்கு உரிமையான காணியையும், எல்லைகளாக கொண்டு அமைந்துள்ள ஒரு ஏக்கர் ஒரு றூட் இருபத்து ஒரு தசம் எட்டு (1ஏ. 1றூ. 21.8பே.) விசாலமான காணியும் அதன் மீது அமைந்துள்ள கனிகள், மரங்கள் உட்பட அனைத்தும் அடங்கலாக மற்றும் மேற்படி வரைபடத்தின் துண்டு இலக்கம் 02 மற்றும் 03 எனக் காட்டப்பட்டுள்ள பாதைகளை பாவிப்பதற்கும் பராமரிப்பதற்குமான உரிமையுடன். (இக்காணி L 25/63 எனும் இலக்கத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது).

2. வடமேல் மாகாணத்தின், குருநாகல் மாவட்டத்தில் ஹிரியால பற்றில் ரிதீகம பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட, ரிதீகம பிரதேச சபை எல்லைக்குள், மேல் இருபத்து இரண்டு கிழக்கு கோரளையில் இலக்கம் 553 கிராம அலுவலர் பிரிவில், லிஹினிவெஹெர கிராமத்தில் அமைந்துள்ள "கட்டுபலாஹேன T.P.426250" எனும் காணிக்கு உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் டபிள்யூ. ஏ. குணதிலக என்பவரினால் தயாரிக்கப்பட்ட இலக்கம் 5996 எனக் குறிப்பிடப்பட்டிருந்தாலும் சரியானதென இலக்கம் 5966 ஐயும் 2013.01.02 என திகதியிடப்பட்டதுமான வரைபடத்திற்கு அமைய பிரித்து வேறாக்கப்பட்ட துண்டு இலக்கம் 01 உடைய வடக்கு : சிறு ஓடையையும்; கிழக்கு : இலக்கம் 5352 உடைய வரைபடத்தின் துண்டு இலக்கம் 01 இன் மிகுதிப்பகுதியும்; தெற்கு : இலக்கம் 5226 உடைய வரைபடத்தின் துண்டு இலக்கம் 03 ஐயும்; மேற்கு : இலக்கம் 5226 உடைய வரைபடத்தின் துண்டு இலக்கம் 05 ஐயும், எல்லைகளாக கொண்டு அமைந்துள்ள இரண்டு றூட் (0ஏ. 2றூ. 0பே.) விசாலமான காணியும் அதன் மீது அமைந்துள்ள கனிகள், மரங்கள் உட்பட அனைத்தும் அடங்கலாக மற்றும் 5226 ஆம் இலக்க வரைபடத்தின் துண்டு இலக்கம் 03 எனக் காட்டப்பட்டுள்ள பாதைகளை பாவிப்பதற்கான உரிமையுடன். (இக்காணி L 25/84 எனும் இலக்கத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது)

3. வடமேல் மாகாணத்தின் குருநாகல் மாவட்டத்தில் வெவவுடவில்லி பற்றில் மாவத்தகம பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட, மாவத்தகம பிரதேச சபை எல்லைக்குள் மஹகல்பட மொகொட கோரளையில் இலக்கம் 709 கஹந்தவெலிபொத கிராம அலுவலர் பிரிவில், உயன்தன கிராமத்தில் அமைந்துள்ள "ரெனில்வத்த" எனும் காணிக்கு உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் எச். விஜேதுங்க என்பவரினால் 1996.09.02 ஆந் திகதி அளந்து வரையப்பட்ட 96138 வரைபடத்தில் துண்டு இல. 01 உடைய - வடக்கு : இலக்கம் 72 உடைய வரைபடத்தின் துண்டு இலக்கம் 06 உம் கல்பொத்த தோட்டத்தையும்; கிழக்கு: இடங்களுக்கு செல்லும் 15 அடி அகலமான பிரவேச மார்க்கத்தையும்; தெற்கு : பெருந்தெருவிலிருந்தான பிரவேச மார்க்கத்தையும் ; மேற்கு : பெருந்தெருவிலிருந்தான பிரவேச மார்க்கத்தையும், எல்லைகளாக கொண்டு அமைந்துள்ள ஒரு றூட் (0ஏ. 1றூ. 0பே.) விசாலமான காணியும் அதன் மீது அமைந்துள்ள கனிகள், மரங்கள் உட்பட அனைத்தும் அடங்கலாக அக்காணிக்கு மேற்குறிப்பிடப்பட்ட உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் எச். விஜேதுங்க என்பவரினால் 2012.06.07 ஆந் திகதி மீண்டும் அளந்து வரையப்பட்ட 5418 ஆம் இலக்க வரைபடத்தில் குறிக்கப்பட்டுள்ள துண்டு இலக்கம் 01 இற்கு அவ்வரைபடத்தின்படி எல்லைகள் - வடக்கு : ஏ. டீ. எஸ். கீர்த்திசேனவிற்கு உரிமையான காணி - உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் கே. எம். எச். நவரத்ன அவர்களின் 72 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு இலக்கம் 06 மற்றும் அநுஷா சுபசிங்ஹவிற்கு உரிமையான காணியையும்; கிழக்கு : இடங்களுக்கு செல்லும் 15 அடி அகலமான பிரவேச மார்க்கத்தையும்; தெற்கு : பெருந்தெருவிலிருந்தான காணிகளுக்கு பிரவேசிக்கும் கிராமசபை வீதியும் இடங்களுக்கு செல்லும் 15 அடி அகலமான பிரவேச மார்க்கத்தையும்; மேற்கு : பெருந்தெருவிலிருந்தான காணிகளுக்கு பிரவேசிக்கும் கிராமசபை வீதியையும், எல்லைகளாக கொண்டு அமைந்துள்ள ஒரு றூட் (0ஏ. 1றூ. 0பே.) விசாலமான காணியும் அதன் மீது அமைந்துள்ள கனிகள், மரங்கள் உட்பட அனைத்தும் அடங்கலாக

(இக்காணி H 17/91 எனும் இலக்கத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது) ஆகிய எல்லைகளுக்குள் அமைந்திருக்கும் காணியும் அதன் மீது உள்ள கட்டிடம், மரங்கள், பழவகைகள் உட்பட அனைத்தும் அடங்கலாக.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

பணிப்பாளர் சபை செயலாளர்.

பிரதேச அபிவிருத்தி வங்கி,
பிரதான அலுவலகம்,
இல. 933, கண்டி வீதி,
வெதமுல்ல,
களனி.

03 - 30

---

### பிரதேச அபிவிருத்தி வங்கி

2008 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க பிரதேச அபிவிருத்தி வங்கி சட்டத்தின் 40 ஆம் பிரிவினால் திருத்தப்பட்ட 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கி சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கடன் அறவிடுதல் விசேட ஏற்பாடுகளின் பிரகாரம் பிரதேச அபிவிருத்தி வங்கியின் பணிப்பாளர் சபையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம்

அங்கொட கங்கானம்லாகே ஆரியரத்ன
சேமிப்பு கணக்கு இலக்கம் 818010101691
கடன் கணக்கு இலக்கம் 818059700002/818059700097

2017.11.28 ஆந் திகதி நடைபெற்ற பிரதேச அபிவிருத்தி வங்கியின் பணிப்பாளர் சபையின் 2017/13 ஆம் இலக்க கூட்டத்தில் கீழ்கண்டவாறு விஷேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

பிரதேச அபிவிருத்தி வங்கியின் சார்பில் பொலன்னறுவையைச் சேர்ந்த சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிசுமான

பண்டார உடகெதர அவர்களினால் சாட்டுதல் செய்யப்பட்ட 2013.05.20 ஆந் திகதியிடப்பட்ட இலக்கம் 701 உடைய ஈட்டுமுறி மற்றும் 2015.03.19 ஆந் திகதியிடப்பட்ட இலக்கம் 873 உடைய ஈட்டுமுறி என்பவற்றின்படி வங்கிக்கு வருமதியாக உள்ள பணம் செலுத்துதல் கடன்படுனர் எனக் குறிப்பிடப்படும் இலக்கம் 426, தியசென்புர, கஹஒலியாவ, பொலன்னறுவை எனும் முகரியில் வசிக்கும் திசாநாயக்க முதியான்சேலாகே புத்திக திசாநாயக்க மற்றும் இலக்கம் 13, அநுராதபுரம் சீதி, அம்பன்பொல எனும் முகவரியில் வசிக்கும் அங்கொட கங்கானம்லாகே ஆரியரத்ன என்பவரினால் கைவிடப்பட்டுள்ளதனால் அவ் ஈட்டுப்பத்திரத்தின்படி 2017.11.22 ஆந் திகதியில் பிரதேச அபிவிருத்தி வங்கிக்கு வருமதியாக உள்ள ஐம்பத்து ஒரு இலட்சத்து முப்பத்து எண்ணாயிரத்து அறுநூற்று தொண்ணூற்று ஆறு ரூபா நாற்பத்து ஒரு சதம் (ரூ. 5,138,696.41) கடன் தொகை மற்றும் அத்தினத்தில் வருமதியாக உள்ள வட்டி பத்தொன்பது இலட்சத்து ஆறாயிரத்து எண்ணூற்று முப்பத்து இரண்டு ரூபா ஐம்பத்து ஏழு சதம் (ரூ. 19,06,832.57), அத்திகதியில் பெறவேண்டிய கட்டணங்கள் ஒரு இலட்சத்து அறுபது ஆயிரத்து அறுநூற்று அறுபத்து நான்கு ரூபா ஐம்பது சதம் (ரூ. 1,60,664.50) மற்றும் 2017.11.22 திகதி முதல் ஏலவிற்பனை திகதி வரை 818059700002 ஆம் இலக்க கடனுக்கு 24% வருடாந்து வட்டி வீதத்திலும் 818059700097 ஆம் இலக்க கடனுக்கு 17% வருடாந்த வட்டி வீதத்திலும் பெறவேண்டிய முழு வட்டி, வரி, விளம்பர செலவு உட்பட ஏலவிற்பனை செலவுகளுடன் மேலும் சட்டரீதியாக செலவுகள் ஏதேனும் வங்கிக்கு வருமதியாக இருப்பின் அவற்றையும் சேர்த்து அறவிடுவதற்கு கடனாளியினால் 701 மற்றும் 873 ஆம் இலக்க ஈட்டு முறிகளின் கீழ் பிரதேச அபிவிருத்தி வங்கிக்கு அடமானமாக வைக்கப்பமட்டுள்ள கீழே அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள ஆதனங்களை பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவேண்டும். ஆதனத்தின் விபரங்கள் கீழே உப அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ளன

மேலும் அவ் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள ஆதனங்களை ஏலவிற்பனை செய்யும் அதிகாரம் கண்டி, டொரிங்டன் வீதி, இலக்கம் 24 எனும் முகவரியில் இருக்கும் ஷொக்மன் அன்ட் சமரவிக்ரம நிறுவனத்துக்கு வழங்கப்பட்டுள்ளது.".

**அடகு வைக்கப்பட்டுள்ள ஆதனங்களின் விபரங்கள்**

வடமத்திய மாகாணத்தின் பொலன்னறுவை மாவட்டத்தில் மெதிரிகிரிய பிரதேச காணி வரி அதிகாரியின் பிரிவில், சிங்கள பற்றில், மெதிரிகிரிய பிரதேச சபை எல்லைக்குள் இலக்கம் 68/ଌ மெதிரிகிரிய கிராம அலுவலர் பிரிவில் கவுடுலுகம 01 ஆம் கட்டம் எனும் கிராமத்தில் அமைந்துள்ள நிலஅளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்டு அவர் வசம் உள்ள அ. ஜ. பி. பொ. 107 எனும் வரைபடத்தில் துண்டு இலக்கம் 274 எனும் காணித்துண்டு என விஸ்தரிக்கப்பட்டுள்ள இரண்டு ஏக்கர் இரண்டு றூட் மூன்று பேர்ச் (02ஏ. 02றூ. 03பே.) விசாலமான "கஹஒலியாவ யாய" என அழைக்கப்படும், வடக்கு : 204 ; கிழக்கு : 286; தெற்கு : 285; மேற்கு : 275 ஆகிய எல்லைகளுக்குள் அமைந்துள்ள காணிக்கு மெதிரிகிரிய பிரதேச செயலாளரின் இலக்கம் NCP/MG/L/1/Survey/Gen மற்றும் 2007.07.16 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் பெற்ற அனுமதியின் கீழ் இறம்புக்கனையில் வசிக்கும் உத்தரவு பெற்ற நிலஅளவயாளர் எச். எம். ஆர். ரி. கே. ஹேரத் என்பவரினால் அளந்து தயாரிக்கப்பட்ட இலக்கம் 4721 மற்றும் 2007.07.20 ஆந் திகதிய வரைபடத்தின்படி காணித்துண்டு 01 எனக் காட்டப்பட்டிருக்கும் பிரித்து வேறாக்கப்பட்ட ஒரு ஏக்கர் இருபத்து ஐந்து புள்ளி ஒன்று ஒன்பது பேர்ச் (01ஏ. 0று. 25.19பே.) விசாலமான காணிக்கு வரைபடத்தின்படி எல்லைகள் - வடக்கு: அ. ஜ. பி. போ. 107 எனும் வரைபடத்தில் 204 தியசென்புர கஹஒலியாவ வீதி; கிழக்கு : அ. ஜ. பி. போ. 107 எனும் வரைபடத்தில் 286 மெதிரிகிரிய கஹஒலியாவ வீதி; தெற்கு : அ. ஜ. பி. போ. 107 எனும் வரைபடத்தில் 285; மேற்கு : இக்காணியின் ஒரு பகுதி ஆகிய எல்லைகளுக்குள் அமைந்துள்ள காணி மற்றும் அதன் மீது அமைந்துள்ள கட்டிடங்கள் மரங்கள், பழவகைகள் உட்பட அனைத்தும் அடங்கலாக.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

பணிப்பாளர் சபைச் செயலாளர்.

பிரதேச அபிவிருத்தி வங்கி,
பிரதான அலுவலகம்,
இல. 933, கண்டி வீதி,
வெதமுல்ல,
களனி.

03 - 31

---

## கொழும்பு யூனியன் வங்கி

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4ஆம் பிரிவின் பிரகாரம் கொழும்பு யூனியன் வங்கி பீ.எல். சீயால் நிறைவேற்றிக் கொள்ளப்பட்ட தீர்மானம் பற்றியஅறிவித்தல்.*

1990ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப் பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் பிரகாரம் கொழும்பு யூனியன் வங்கி பீ.எல்.சீ பணிப்பாளர் சபையால் 2018, சனவரி மாதம் 30ஆந் திகதி நடாத்தப்பட்ட பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் பின்வரும் பிரேரணை ஏகமனதாக நிறைவேற்றிக் கொள்ளப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் கொழும்பு 13, கே. சிறில் சீ. பெரேரா மாவத்தை, 478/1 ஆம் இலக்க இல்லத்தில் தனது பிரதான வியாபார இடத்தைச் நடாத்திச் செல்லும் டானியெல் பிளாஸ்டிக் இன்டஸ்ட்றிஸ் என்னும் பெயர் மகுடத்தின் கீழ் தனிஉரிமையாளராக வியாபாரமொன்றைச் நடத்திச் செல்லும் (பதிவு இல. W/A 11483 இன் கீழ் மேல் மாகாணத்தின் வியாபாரப் பெயர் பதிவாளரால் பதிவு செய்யப்பட்ட) சண்முகம் டானியெல் செல்வம் (தேசிய அடையாள அட்டை இல. 701142489V) (இதனகத்துப் பின்னர்

"கடன்பெற்றவர்" என அழைக்கப்படுகின்ற) என்பவரால் 2017, செப்தெம்பர் மாதம் 20 ஆந் திகதிய முனைவுக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ள நியதிகள் மற்றும் நிபந்தனைகளின் கீழ் ஆறு கோடி ரூபாவாகிய (ரூபா. 60,000,000) தவணைக் கடன் வசதியொன்றைப் பெற்றுக் கொண்டு, சொல்லப்பட்ட சண்முகம் டானியெல் செல்வம் என்பவரால் ஆறு கோடி ரூபா (ரூபா 6,00,00,000) தொகைக்காக பிரசித்த நெத்தாரிசு எல். ஜீ. என். சாரங்கி என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 628 ஆம் இலக்க 2017, செப்தெம்பர் 22 ஆந் திகதிய முதிராத ஈட்டுமுறியொன்று நிறைவேற்றப்பட்டு, PB676PQ ஆம் பதிவு இலக்ககொழும்பு யூனியன் வங்கி பீஎல்சீயிடம் (இதனகத்துப் பின்னர் யூனியன் வங்கி என அழைக்கப்படுகின்ற) அறவிடப்பட வேண்டிய சொல்லப்பட்ட தவணைக்கடன் வசதி மற்றும் வட்டியை செலுத்துவதற்காக பிணையாக இதன் கீழ் அட்டவணையில் விபரமாக காட்டப்பட்டுள்ள ஆதனத்தை அடைமானம் வைத்து பிணையில் வைக்கப்பட்டுள்ளதாதலாலும், சொல்லப்பட்ட தவணைக் கடன் வசதியின் காரணமாக 2018, சனவரி மாதம் 17 ஆந் திகதிக்கு மொத்த நிலுவைப் பணத்தொகையாகிய ஆறு கோடியே பதினைந்து இலட்சத்து இருபத்தேழாயிரத்து அறுநூற்றி இருபத்தொரு ரூபா நாற்பத்தி ஆறு சதமாகிய (ரூபா 61,527,621.46) தொகை மற்றும் முதல் நிலுவைத் தொகையாகிய ஐந்து கோடியே தொண்ணூற்றி ஐந்து இலட்சத்து நாற்பத்திரண்டாயிரத்து முன்னூற்றி எண்பத்தேழு ரூபா இருபத்தி மூன்று சதமாகிய (ரூபா. 59,542,389.23) தொகையின் மீது 2018 சனவரிமாதம் 18 ஆந் திகதி தொடக்கம் அவ்வாதனத்தை விற்பனை செய்யும் திகதிவரை ஆண்டொன்றுக்கு 20% வீதம் மேலதிக வட்டியும் அக் கடன் பெற்றவரிடமிருந்து யூனியன் வங்கிக்கு கிடைக்கப் பெறவேண்டியும் அளவிடப்பட வேண்டியும் உள்ளதாதலாலும், சொல்லப்பட்ட கடன் நிலுவை அல்லது அதில் ஏதேனுமொரு பகுதியையாவது அக்கடன் பெற்றவர் செலுத்தி தீர்ப்பதில் தவறுகை புரிந்துள்ளார் என யூனியன் வங்கி திருப்தியடைந்ததன் பின்னர் 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம் யூனியன் வங்கியின் பணிப்பாளர் சபைக்கு உரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் செயல்பட்டு 2018, சனவரி மாதம் 17 ஆந் திகதிக்கு மொத்த நிலுவைத் தொகையாகிய ஆறு கோடியே பதினைந்து இலட்சத்து இருபத்தேழாயிரத்து அறுநூற்றி இருபத்தொரு ரூபா நாற்பத்தி ஆறு சதமாகிய (ரூபா 61,527,621.46) தொகை மற்றும் முதல் நிலுவைத் தொகையாகிய ஐந்து கோடியே தொண் ணூற்றி ஐந்து இலட்சத்து நாற்பத்திரண்டாயிரத்து முன்னூற்றி எண்பத்தேழு ரூபா இருபத்து மூன்று சதமாகிய (ரூபா. 5,95,42,389.23) தொகையின் மீது 2018, சனவரி மாதம் 18 ஆந் திகதி தொடக்கம் அவ்வாதனத்தை விற்பனை செய்யும் திகதிவரை ஆண்டொன்றுக்கு 20% வீதம் மேலதிக வட்டியையும், மேலும், சொல்லப்பட்ட 628 ஆம் இலக்க ஈட்டுமுறி மற்றும் 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க அச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் கீழ் யூனியன் வங்கிக்கு அறவீடு செய்து கொள்வதற்கு உரித்துள்ள பிற சகல பணத்தொகைகளையும் அறவீடு செய்து கொள்வதற்காக சொல்லப்பட்ட 628 ஆம் இலக்க ஈட்டுமுறியின் அதிகாரத்தின் பிரகாரம் மற்றும் அதற்குட்பட்டு யூனியன் வங்கியில் அடைமானம் வைக்கப்பட்ட இதன் கீழ் அட்டவணையில் விபரமாகக் காட்டப்பட்டுள்ள ஆதனத்தை சொல்லப்பட்ட 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க சட்டத்தின் பிரகாரம் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வதற்கு திரிவங்க அன்ட் சேனாநாயக்க ஒக்‌ஷனியர்ஸ் இடம் அதிகாரத்தை உரித்தாக்குவதற்கு 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க அச் சட்டத்தின் 4ஆம் பிரிவின் பிரகாரம் இத்தால் தீர்மானிக் கப்படுகிறது.".

### அட்டவணை

கிழக்கு மாகாணம், அம்பாறை மாவட்டம், பாணமைபற்று பொத்துவில் பிரதேச செயலாளர் பிரிவின் ஊரணி கிராம அலுவலர் பிரிவின் ஊரணியில் அமைந்துள்ள அரகொன் எஸ்டேட் மறுபெயர் உறனிக்காடு என்னும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் ஏ. ஈ. கே. திசவீரசிங்க என்பவரால் அளந்து தயார் செய்யப்பட்ட 1171/ 2014 ஆம் இலக்க 2014, திசெம்பர் மாதம் 28 ஆந் திகதியவரைபடத்தின் பிரகாரம் பிரித்தொதுக்கப்பட்டதுண்டு இல. 1 என்னும் இடப்பரப்புக்கு எல்லைகள் - வடகிழக்கே: அரசாங்கத்தின் மற்றும் மறுபேரின் காணியும்; தென்கிழக்கே: கரைக்காக ஒதுக்கப்பட்ட இடப்பரப்பும்; தென்மேற்கே: 202 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள துண்டு இல. 1 உம்; தென்மேற்கே: தற்காலம் ஒழுங்கையொன்றாகிய 202 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள துண்டு இல. 3 உம் ஆகிய இவ்வெல்லைகளினுள் அமைந்துள்ள மேற்கூறிய 1171/2014 ஆம் இலக்க வரைபடத்தின் படி பதினாறு ஏக்கர் இரண்டு றூட் ஐந்துபேர்ச் (16ஏ. 2றூ. 5பே.) விசாலமான இடப்பரப்பு அதன்கண் அமைந்துள்ள கட்டடங்கள், பயிர்செய்கைகள், மரங்கள் அனைத்தும் சேர்த்து இவ்வாதனம் அம்பாறை காணிப் பதிவகத்தில் J 08/22 ஆம் இலக்க இருமடித் தாளில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

இனோகா ஜயவர்தன,
பணிப்பாளர் சிபையின் செயலாளர்.

3-111

---

### டீஎவ்சீசீ வங்கி பீஎல்சீ

1990ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க, வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4ஆம் பிரிவின்கீழ் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் பற்றிய அறிவித்தல்

1990ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க, வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8ஆம் பிரிவின் நியதிகளின்படி, பின்வரும் தீர்மானமானது டீஎவ்சீசீ வங்கி பீஎல்சீயின் பணிப்பாளர் சபையினால் 2018, சனவரி 29 ஆந் தேதியன்று ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

பதுளையைச் சேர்ந்த திசாநாயக்க முதியன்சலாகே பியதிஸ்ஸ திசாநாயக்க என்பவர், (டீஎவ்சீசீ வர்தன வங்கி பீஎல்சீயின் அடுத்துறுநரான) டீஎவ்சீசீ வங்கி பீஎல்சீ சார்பில் பிரசித்த நொத்தாரிசு எச்எம்சீசீ ஹென்நாயக்க மனிக்கே என்பவரினால் எல்லாம் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2015.03.04 ஆந் தேதிய 5493 ஆம் இலக்க ஈட்டுமுறிமீதும் 2014.11.27 ஆந் தேதிய 5408 ஆம் இலக்க ஈட்டுமுறிமீதும் மற்றும் 2016.03.15 ஆந்தேதிய 5915 ஆம் இலக்க ஈட்டுமுறிமீதும் வருமதியாகவுள்ள கொடுப்பனவுகளைச் செலுத்துவதில் தவணைதவறியுள்ளாராதலாலும்.

2017, செத்தெம்பர் 29 ஆந்தேதியன்றுள்ளவாறாகப் ஒரு கோடியே ஐம்பத்தொன்பது இலட்சத்து எழுநூற்றியேழு ரூபா தொண்ணூறு சதம் (ரூ. 1,59,00,707.90) கொண்ட தொகையும், 2017, செத்தெம்பர் 30 ஆந் தேதியிலிருந்து விற்பனைத் தேதிவரை ஒரு கோடியே இருபத்தைந்து இலட்சத்து முப்பத்தாறாயிரத்து நானூற்றியைம்பத்தி நான்கு ரூபா (ரூ. 1,25,36,454) கொண்ட தொகைமீது ஒவ்வொரு மாதத்தினதும் முதலாவது வேலைநாளன்று ஒவ்வொரு மாதமும் மீளாயப்படும் ஆண்டொன்றுக்கு உயர்வான 0.5 சதவீதத்துக்கு மிகக் கிட்டியதாக நேர்த்தியாக்கப்பட்டு சராசரி எடைவீதமளிக்கப்பட்ட பிரதான கடன்கொடுக்கும் வீதத்துக்குமேல் (சஎபிவீ) ஆண்டொன்றுக்கு ஏழு சதவீத (7%) வட்டியும், அத்துடன் பதினெட்டு இலட்சத்து எழுபத்திநான்காயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூற்றொரு ரூபா (ரூ. 18,74,991) கொண்ட தொகைமீது ஒவ்வொரு மாதத்தினதும் முதலாவது வேலைநாளன்று ஒவ்வொரு மாதமும் மீளாயப்படும் ஆண்டொன்றுக்கு உயர்வான 0.5 சதவீதத்துக்கு மிகக்கிட்டியதாக நேர்த்தியாக்கப்பட்டு சராசரி எடைவீதமளிக்கப்பட்ட பிரதான கடன்கொடுக்கும் வீதத்துக்குமேல் (சஎபிவீ) ஆண்டொன்றுக்கு ஏழு தசம் ஐந்து சதவீத (7.5%) வட்டியும், அத்துடன் ஏழு இலட்சத்து ஐம்பத்தெட்டாயிரத்து இருநூற்றியறுபத்தாறு ரூபா எண்பத்தேழு சதம் (ரூ. 7,58,266.87) கொண்ட தொகைமீது ஆண்டொன்றுக்கு இருபத்தெட்டுச் சதவீதத்தில் (28%) கணக்கிடப்பட்ட வட்டியும் மேற்கூறப்பட்ட 5493, 5408 மற்றும் 5915 ஆம் இலக்க ஈட்டுமுறிகளின் மீது சொல்லப்பட்ட திசாநாயக்க முதியன்சலாகே பியதிஸ்ஸ திசாநாயக்க என்பவரிடமிருந்து டீஎவ்சீசீ வங்கி பீஎல்சீக்குச் சேருமதியாகவும் வருமதியாகவும் இருக்கின்றதாதலாலும்.

டீஎவ்சீசீ வங்கி பீஎல்சீயின் பணிப்பாளர் சபையானது, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அவர்களுக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின்கீழ் 1990ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க, வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 13ஆம் பிரிவின் நியதிகளின்படி மேற்சொல்லப்பட்ட 5493, 5408 மற்றும் 5915 ஆம் இலக்க ஈட்டுமுறிகளின் பொருத்தனைகளுக்கிணங்க டீஎவ்சீசீ வங்கி பீஎல்சீயினால் உறப்பட்ட, ஒரு கோடியே ஐம்பத்தொன்பது இலட்சத்து எழுநூற்றியேழு ரூபா தொண்ணூறு சதம் (ரூ. 1,59,00,707.90) கொண்ட தொகையையும், 2017, செத்தெம்பர் 30 ஆந் தேதியிலிருந்து விற்பனைத் தேதிவரை ஒரு கோடியே இருபத்தைந்து இலட்சத்து முப்பத்தாறாயிரத்து நானூற்றியைம்பத்தி நான்கு ரூபா (ரூ. 1,25,36,454) கொண்ட தொகைமீது ஒவ்வொரு மாதத்தினதும் முதலாவது வேலைநாளன்று ஒவ்வொரு மாதமும் மீளாயப்படும் ஆண்டொன்றுக்கு உயர்வான 0.5 சதவீதத்துக்கு மிகக்கிட்டியதாக நேர்த்தியாக்கப்பட்டு சராசரி எடைவீதமளிக்கப்பட்ட பிரதான கடன்கொடுக்கும் வீதத்துக்குமேல் (சஎபிவீ) ஆண்டொன்றுக்கு ஏழு சதவீத (7%) வட்டியையும், அத்துடன் பதினெட்டு இலட்சத்து எழுபத்திநான்காயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூற்றொரு ரூபா (ரூ. 18,74,991) கொண்ட தொகைமீது ஒவ்வொரு மாதத்தினதும் முதலாவது வேலைநாளன்று ஒவ்வொரு மாதமும் மீளாயப்படும் ஆண்டொன்றுக்கு உயர்வான 0.5 சதவீதத்துக்கு மிகக் கிட்டியதாக நேர்த்தியாக்கப்பட்டு சராசரி எடைவீதமளிக்கப்பட்ட பிரதான கடன்கொடுக்கும் வீதத்துக்குமேல் (சஎபிவீ) ஆண்டொன்றுக்கு ஏழு தசம் ஐந்து சதவீத (7.5%) வட்டியையும், அத்துடன் ஏழு இலட்சத்து ஐம்பத்தெட்டாயிரத்து இருநூற்றியறுபத்தாறு ரூபா எண்பத்தேழு சதம் (ரூ. 7,58,266.87) கொண்ட தொகைமீது ஆண்டொன்றுக்கு இருபத்தெட்டுச் சதவீதத்தில் (28%) கணக்கிடப்பட்ட வட்டியையும் அல்லது விற்பனை செய்யப்படும் நேரத்தில் செலுத்தப்படாதெஞ்சியுள்ள அதன் ஏதேனும் பாகத்தினையும் கீழே விபரிக்கப்படும் காணியையும் வளவுகளையும் விளம்பரப்படுத்துவதற்கான செலவுகள், விற்பதற்கான செலவுகள், செலவிடப்பட்ட மற்றெல்லாப் பணங்கள், செலவுதொகைகள், மற்றும் வேறு இறுப்பனவுகள் என்பவற்றோடு சேர்த்து அறவிடுவதற்காக மேற்கூறப்பட்ட ஈட்டுமுறிகள்மூலம் திசாநாயக்க முதியன்சலாகே பியதிஸ்ஸ திசாநாயக்க என்பவரினால் டீஎவ்சீசீ வங்கி பீஎல்சீக்கு ஈடுவைக்கப்பட்ட சொல்லப்பட்ட காணியும் வளவுகளும் கண்டியைச் சேர்ந்த உத்தரவுபெற்ற ஏலதாரர் திரு. ஐ. டபிள்யூ. ஜயசூரிய அவர்களினால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவேண்டுமென இத்தால் தீர்மானிக்கின்றது.".

**5493 ஆம், 5915 ஆம் இலக்க ஈட்டுமுறிகள்மூலம் ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்**

ஊவா மாகாணத்தின், பதுளை மாவட்டம், பதுளைப் பிரதேச செயலகத்தின் மாநகரசபை எல்லைகளினுள்ளும் பட்டின நான்கெல்லைகளினுள்ளும் பதுளை கிழக்கு கிராம அலுவலர் பிரிவில் ரிவர்சைட் வீதியில் அமைந்துள்ளதும் உநி, எம். எவ். இஸ்மைல் என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1989.03.19 ஆந் தேதிய 3242 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் 1 எனக் குறித்துக்காட்டப்பட்டதும் "கொடித்துவக்குக் கும்புர" எனவழைக்கப்படுவதும் பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும்: அதன் எல்லைகள் பின்வருமாறு- வடக்கில் : காலஞ்சென்ற சொய்சாவின் மரபுரிமையாளர்களினது தோட்டம்; கிழக்கில் : ரிவர்சைட் வீதி; தெற்கில் : சொல்லப்பட்ட வரைபடத்தில் காணித்துண்டம் 2 ; மற்றும் மேற்கில் : முத்தியங்கன விகாரைக்குரிய நெல்வயல்: பரப்பளவில் இது, அதன்மீதுள்ள கட்டிடம் மற்றும் எல்லாவற்றுடனும் இருபது பேர்ச்சு (0ஏ. 0றூ. 20பே.) கொண்டுள்ளதுடன் பதுளைக் காணிப்பதிவகத்தில் பதிவு செய்யப்பட்டுமுள்ளது.

உநி, எம்பிஎம்ஏபி காவரமன்ன என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2015.01.31 ஆந் தேதிய 206 ஆம் இலக்க அண்மைய நில அளவை வரைபடத்தின்படி மேற்படி காணி பின்வருமாறு விவரிக்கப்படுகின்றது:

ஊவா மாகணத்தின் பதுளை மாவட்டம், பதுளைப் பிரதேச செயலகத்தின் மாநகரசபை எல்லைகளினுள்ளும் பட்டின நான்கெல்லைகளினுள்ளும் பதுளை கிழக்கு கிராம அலுவலர் பிரிவில் ரிவர்சைட் வீதியில் அமைந்துள்ளதும் (உநி, எம் எவ் இஸ்மைல் என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1989.03.19 ஆந்தேதிய 3242 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் 1 இன் மீள்நிலஅளவையாகவுள்ளதும்) உநி, எம்பிஎம்ஏபி காவரமன்ன என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2015.01.31 ஆந் தேதிய 206 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் 1 எனக் குறித்துக்காட்டப்பட்டதும் கொடித்துவக்குக் கும்புர எனவழைக்கப்படுவதும் பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும்: அதன் எல்லைகள் பின்வருமாறு- வடக்கில் : காலஞ்சென்ற சொய்சாவின் மரபுரிமையாளர்களினது தோட்டம்; கிழக்கில்: ரிவர்சைட் வீதி; தெற்கில் : உநி, எம்எவ் இஸ்மைல் என்பவரின் 3242 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் 2 ; மற்றும் மேற்கில் : முத்தியங்கன விகாரைக்குரிய நெல்வயல், பரப்பளவில் இது, ரிவர்சைட் வீதியில் 9 ஆம் வரிமதிப்பீட்டிலக்கத்தைக் கொண்ட (தற்போது 31 - B) கட்டிடத்துடனும் அதன் மீதுள்ள எல்லாவற்றுடனும் இருபது பேர்ச் (0ஏ. 0றூ. 20பே.) கொண்டுள்ளது.

**5408ஆம் இலக்க ஈட்டுமுறிகள்மூலம் ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்**

ஊவா மாகாணத்தின் பதுளை மாவட்டம், பதுளை ரில்பொல கோறளைப் பிரதேச செயலாளர் பிரிவில் தமன்வரக் கிராமத்தில் தமன்வரக் கிராம அலுவலர் பிரிவில் வேகடவில் அமைந்துள்ளதும் ''எம்பில்லவெல்க்கபள்ளே பட்டன, வேவேபிட்டியவத்த, துங்கொட்டுவ, உடஹாகெதரவத்த, கல்கொட்டுவேவத்த, நாரங்கஹாவத்த'' எனவழைக்கப்பட்டு அறியப்படுவதும் உநி, ஏ. ஏ. சமரசேக்கர என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2004, நவெம்பர் 07 ஆந் தேதிய 1446 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் இல. 01 எனக் குறித்துக்காட்டப்பட்டதும் பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும்: அதன் எல்லைகள் பின்வருமாறு- வடக்கில் : டீ எம் கிரிபண்டாவின் தோட்டம்; கிழக்கில் : டீ எம் கிரிபண்டாவின் தோட்டம்; தெற்கில் : திசாநாயக்காவின் தோட்டம் ; மற்றும் மேற்கில் வீதிக்கான ஒதுக்கிடம் (பெருவழிகள்); பரப்பளவில் இது, அதன்மீதுள்ள எல்லாவற்றுடனும் முப்பத்தைந்து தசம் ஐந்து பூச்சியம் பேர்ச்சுக்களை (0ஏ. 0றூ. 35.50பே.) கொண்டுள்ளதுடன் பதுளைக் காணிப்பதிவகத்தில் பதிவுசெய்யப்பட்டுமுள்ளது.

லக்ஷ்மன் சில்வா,
பிரதான நிறைவேற்றலுவலர்.

டீஎவ்சீசீ வங்கி பீஎல்சீ
இல. 73/5, காலி வீதி,
கொழும்பு 3.

3-110

**டீஎவ்சீசீ வங்கி பீஎல்சீ**

*1990ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க, வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4ஆம் பிரிவின்கீழ் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் பற்றிய அறிவித்தல்*

1990ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க, வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8ஆம் பிரிவின் நியதிகளின்படி, பின்வரும் தீர்மானமானது டீஎவ்சீசீ வங்கி பீஎல்சீயின் பணிப்பாளர் சபையினால் 2018, சனவரி 29 ஆந் தேதியன்று ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

மாத்தளையைச் சேர்ந்த மந்த்ரி கோறள கெதர சனத் பண்டார தசநாயக்க என்பவர், (டீஎவ்சீசீ வர்தன வங்கி பீஎல்சீயை அடுத்துறும்) டீஎவ்சீசீ வங்கி பீஎல்சீ சார்பில் பிரசித்த நொத்தாரிசு ஆர். மணிவண்ணன் என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2014.12.22 ஆந் தேதிய 6846 ஆம் இலக்க ஈட்டுமுறிமீதும், பிரசித்த நொத்தாரிசு ஆர். மணிவண்ணன் என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2015.09.16 ஆந் தேதிய 7489 ஆம் இலக்க ஈட்டுமுறிமீதும் வருமதியாகவுள்ள கொடுப்பனவுகளைச் செலுத்துவதில் தவணைதவறியுள்ளாராதலாலும்.

2017, ஒற்றோபர் 31 ஆந் தேதியன்றுள்ளவாறாகப் ஒரு கோடியே முப்பத்தேழு இலட்சத்து மூன்றாயிரத்துத் தொளாயிரத்துமுப்பது ரூபா பத்தொன்பது சதம் (ரூ. 13,703,930.19) கொண்ட தொகையும், 2017, நவெம்பர் 01 ஆந்தேதி தொடக்கம் விற்பனைத் தேதிவரை தொண்ணூற்று மூன்று இலட்சத்து அறுபத்தேழாயிரத்து எண்ணூற்றியறுபது ரூபா முப்பத்திநான்கு சதம் (ரூ. 93,67, 860.34) கொண்ட தொகைமீது ஆண்டொன்றுக்குப் பதினைந்து தசம் ஐந்து சதவீது (15.5%) வட்டியும் முப்பது இலட்சத்து எண்பதாயிரம் ரூபா (ரூ. 30,80,000) கொண்ட - தொகைமீது ஒவ்வோராண்டும் சனவரி, ஏப்பிறல், யூலை, ஒற்றோபர் ஆகிய மாதங்களின் 1 ஆவது வேலைநாளன்று மூன்று மாதங்களுக்கொருதடவை மீளாயப்படும் சராசரி எடைவீதமளிக்கப்பட்ட பிரதான கடன்கொடுக்கும் வீதத்துக்குமேல் (சஎபிவீ ஸ்பொட்) ஆண்டொன்றுக்கு ஏழு தசம் ஐந்து சதவீத (7.5%) வட்டியையும், (ஆண்டொன்றுக்குப்) பதினான்கு சதவீத (14%) அடிமட்ட வீதத்துக்கமைய), சொல்லப்பட்ட மந்த்ரி கோறளை கெதர சனத் பண்டார தசநாயக்க என்பவரிடமிருந்து மேற்கூறப்பட்ட 6846 மற்றும் 7489 ஆம் இலக்க ஈட்டுமுறிகள் மீது டீஎவ்சீசீ வங்கி பீஎல்சீக்குச் சேருமதியாகவும் வருமதியாகவும் இருக்கின்றதாதாதலாலும்;

டீஎவ்சீசீ வங்கி பீஎல்சீயின் பணிப்பாளர் சபையானது 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அவர்களுக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 13 ஆம் பிரிவின் நியதிகளின்படி மேற்சொல்லப்பட்ட

6846 மற்றும் 7489 ஆம் இலக்க ஈட்டுமுறிகளின் பொருத்தனைகளுக்கிணங்க டீஎவ்சீசீ வங்கி பீஎல்சீயினால் உறப்பட்ட ஒரு கோடியே முப்பத்தேழு இலட்சத்து மூன்றாயிரத்துத் தொளாயிரத்துமுப்பது ரூபா பத்தொன்பது சதம் (ரூ. 13,703,930.19) கொண்ட தொகையையும், 2017, நவெம்பர் 01 ஆந் தேதி தொடக்கம் விற்பனைத் தேதிவரை தொண்ணூற்று மூன்று இலட்சத்து அறுபத்தேழாயிரத்து எண்ணூற்றியறுபது ரூபா முப்பத்திநான்கு சதம் (ரூ. 93,67,860.34) கொண்ட தொகைமீது ஆண்டொன்றுக்குப் பதினைந்து தசம் ஐந்து சதவீத (15.5%) வட்டியையும் முப்பது இலட்சத்து எண்பதாயிரம் ரூபா (ரூ. 30,80,000) கொண்ட தொகைமீது ஒவ்வோராண்டும் சனவரி, ஏப்பிறல், யூலை, ஒற்றோபர் ஆகிய மாதங்களின் 1 ஆவது வேலைநாளன்று மூன்று மாதங்களுக்கொருதடவை மீளாயப்படும் சராசரி எடைவீதமளிக்கப்பட்ட பிரதான கடன்கொடுக்கும் வீதத்துக்குமேல் (சஎபிவீ ஸ்பொட்) ஆண்டொன்றுக்கு ஏழு தசம் ஐந்து சதவீத (7.5%) வட்டியையும், (ஆண்டொன்றுக்குப் பதினான்கு சதவீத (14%) அடிமட்ட வீதத்துக்கமைய) அல்லது விற்பனை செய்யப்படும் நேரத்தில் செலுத்தப்படாதெஞ்சியுள்ள அதன் ஏதேனும் பாகத்தினையும் கீழே விபரிக்கப்படும் காணியையும் வளவுகளையும் விளம்பரப்படுத்தவதற்கான செலவுகள், விற்பதற்கான செலவுகள், செலவிடப்பட்ட மற்றெல்லாப் பணங்கள், செலவுதொகைகள், மற்றும் வேறு இறுப்பனவுகள் என்பவற்றோடு சேர்த்து அறவிடுவதற்காக மேற்கூறப்பட்ட ஈட்டுமுறிகள் மூலம் மந்திரி கோறள கெதர சனத் பண்டார தசநாயக்க என்பவரினால் டீஎவ்சீசீ வங்கி பீஎல்சீக்கு ஈடுவைக்கப்பட்ட சொல்லப்பட்ட காணியும் வளவுகளும் கண்டியைச் சேர்ந்த உத்தரவுபெற்ற ஏலதாரர் திரு. ஐடபிள்யூ ஜயசூரிய அவர்களினால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவேண்டுமென இத்தால் தீர்மானிக்கின்றது.

### 6846 மற்றும் 7489 ஆம் இலக்க ஈட்டுமுறிகள்மூலம் ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்

மத்திய மாகணம், மாத்தளை மாவட்டத்தில் மாத்தளை மாநகரசபை எல்லைகளினுள் ஹிஜகொல்ல, மொய்சி கிரெசென்ட் வீதியில் அமைந்துள்ளதும் "கொட்டுவே கெதர வத்த" எனவழைக்கப்படும் காணியிலிருந்து பரப்பளவில் பதினான்கு பேர்ச்சுக்களை (0ஏ. ரூ0. பே14) கொண்டுள்ளதும் மாத்தளையைச் சேர்ந்த உநி ஜேஎம் ஜயசேக்கர என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1996.12.06 அந்தேதிய 4558 ஆம் இலக்க வரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்டதும் காணித்துண்டம் 03 எனவடையாளமிடப்பட்டதும் பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும்; சொல்லப்பட்ட காணித்துண்டம் 3, சொல்லப்பட்ட 4558 ஆம் இலக்க வரைபடத்தின்படி பின்வரும் எல்லைகளையுடையது- வடக்கில்: மொய்சி கிரெசென்ட் வீதி; கிழக்கில் : சொல்லப்பட்ட வரைபடத்தில் காணித்துண்டம் 4; தெற்கில் : ஆராச்சிவெல எல; மற்றும் மேற்கில் : சொல்லப்பட்ட வரைபடத்தில் காணித்துண்டம் 2, அதன் மீதுள்ள கட்டிடம், பயிர்கள் மற்றும் எல்லாவற்றுடனும் சேர்த்து; மாத்தளைக் காணிப் பதிவக அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி சொல்லப்பட்ட காணி, அண்மையில் மீள்நில அளவை யிடப்பட்டு பின்வருமாறு விவரிக்கப்படுகின்றது:

மத்திய மாகாணம், மாத்தளை மாவட்டத்தில் மாத்தளை மாநகரசபை எல்லைகளினுள் ஹிஜகொல்ல, மொய்சி கிரெசென்ட் வீதியில் அமைந்துள்ளதும் கொட்டுவே கெதர வத்த எனவழைக்கப்படும் காணியிலிருந்து பரப்பளவில் பதின்மூன்று தசம் ஏழு ஆறு பேர்ச் (0ஏ. 0றூ. 13.76பே.) (0.0348 ஹெக்டேயர்களை) கொண்டுள்ளதும் உநி டபிள்யூ. சீ. டயஸ் என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2014.12.16 ஆந் தேதிய 3118 ஆம் இலக்க வரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்டதும் காணித்துண்டம் 1 எனவடையாளமிடப்பட்டதும் பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும்; சொல்லப்பட்ட காணித்துண்டம் 1, சொல்லப்பட்ட 3118 ஆம் இலக்க வரைபடத்தின்படி பின்வரும் எல்லைகளையுடையது- வடக்கில்: மொய்சி கிரெசென்ட வீதி, கிழக்கில் : ஏ சந்திரசேக்கரவினால் உரிமைகோரப்பட்ட, உநி, ஜே. எம் ஜயசேக்கர என்பவரினால் தயாரிக்கப்பட்ட 4558 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் 4; தெற்கில் : எல ; மற்றும் மேற்கில் : சீ. எம். வாஹீடினால் உரிமைகோரப்பட்ட, உநி ஜே. எம். ஜயசேக்கர என்பவரினால் தயாரிக்கப்பட்ட 4558 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் 2, அதன்மீதுள்ள கட்டிடம், பயிர்கள் மற்றும் எல்லாவற்றுடனும் சேர்த்து.

லக்ஷ்மன் சில்வா,
பிரதான நிறைவேற்றலுவலர்.

டீஎவ்சீசீ வங்கி பீஎல்சீ,
இல. 73/5, காலி வீதி,
கொழும்பு 3.

3-109

---

### சம்பத் வங்கி பீஎல்சீ

(முன்பு சம்பத் வங்கி லிமிடெட் என அழைக்கப்பட்டது)

2011 ஆம் ஆண்டின் 01 மற்றும் இல. 19 இனால் திருத்தப்பட்டவாறான 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம்

பீ.என். டீ தர்ஷன
கணக்கு இல. 0024 5900 0308 மற்றும் 1024 5600 0448
2017.11.30 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் விசேடமாகவும், ஏகமனதாகவும் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்

"PQ 144 எனும் கம்பனி இலக்கத்தைக் கொண்ட கொழும்பு – 2, சேர் ஜேம்ஸ் பீரிஸ் மாவத்தை, இல. 110 இல் அமைந்த சம்பத் வங்கி பீஎல்சீ ஹோல்டிங் சார்பாக கம்பஹா பிரசித்த நொத்தாரிசான என். எம். நாகொடவித்தான என்பவரால் எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2015, நவெம்பர் 20 ஆந் திகதியிடப்பட்ட இல. 2505 மற்றும் 2016, மே 31 ஆந்

திகதியிடப்பட்ட இல. 2928 எனும் ஈட்டுமுறிகளின்மீது அடகு வைக்கப்பட்டு பிணையாக இங்கு அட்டவணையில் நேர்த்தியாக விபரிக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகள் மீது பெற்றுக் கொண்ட கடனை, கடமைப்பட்டவர்கள் என்ற வகையில் கடன்பட்ட இலங்கைச் சனநாயக சோஷலிசக் குடியரசின் பட்டகொட நாயக்கலாகே திலீப்ப தர்ஷன என்பவர் மீள் செலுத்தத் தவறியுள்ளமையினால், கூறப்பட்ட இலக்கங்கள் 2505 மற்றும் 2928 எனும் ஈட்டுமுறிகளின் பிரகாரம் அறவிடப்பட வேண்டியமொத்தத் தொகையை இலங்கையில் சட்டபூர்வமாக செல்லுபடியாகும் ரூபாவில் இரண்டு கோடியே நாற்பத்துமூன்று இலட்சத்து முப்பத்தாறாயிரத்து இருநூற்று ஐந்து ரூபா எண்பது சதம் (2,43,36,205.80) 2017, ஒற்றோபர் 31 ஆந் திகதி சம்பத் வங்கி பீஎல்சீ இற்கு செலுத்தப்படல் வேண்டும் என்பதுடன், குறிப்பிடப்பட்ட இரண்டு கோடியே நாற்பத்துமூன்று இலட்சத்து முப்பத்தாறாயிரத்து இருநூற்று ஐந்து ரூபா எண்பது சதம் (2,43,36,205.80) 2017, நவெம்பர் 01 ஆந் திகதி முதல் இலக்கங்கள் 2505 மற்றும் 2928 எனும் ஈட்டு முறிகளின் மீது அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதி வரை அறுபத்தெட்டு இலட்சத்து ஆறாயிரத்து முந்நூற்றி எண்பத்தெட்டு ரூபா தொண்ணூற்றி எட்டு சதம் (ரூபா 68,06,388.98) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பத்து தசம் ஐந்து வீதம் (10.5%) மேலும் ஒரு கோடியே அறுபத்தைந்து இலட்சத்து இருபதினாயிரத்து தொளாயிரத்து நாற்பத்தி எட்டு ரூபா எழுபத்திரண்டு சதம் (ரூபா 1,65,20,948.72) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பத்து தசம் ஏழு ஐந்து வீதம் (10.75%) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு கூறப்பட்ட ஈட்டு முறி இலக்கங்கள் 2505 மற்றும் 2928 இன் மீது பிணையாக வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கண்டி உத்தரவுபெற்ற ஏலதாரர்களான ஐ டபிள்யூ. ஜயசூரிய என்பவர்கள் மூலமாக பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்ய வேண்டும் என 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரத்திற்கு அமைவாக சம்பத் வங்கி பீஎல்சீ இத்தால் தீர்மானிக்கின்றது.".

**அட்டவணை**

1. வடமேல் மாகாணம், புத்தளம் மாவட்டம், தெற்கு பிட்டிகல் கோரளே யட்டகலன பத்து நாத்தாண்டிய பிரதேச சபை எல்லைகளுக்குள் மற்றும் மாஹாவெவ பிரதேச செயலாளர் பிரிவின் பஹல குடாவெவ இல. 522B கிராமஅலுவலர் பிரிவிற்குள் குடாவெவ கிராமத்தில் அமைந்த "கோஹோம்பகஹாவத்த" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஆர். எஃப். எச். பெர்ணாண்டோ என்பவரால் தயாரிக்கப்பட்ட 2015, செத்தெம்பபர் 27 ஆந் திகதியிடப்பட்ட இல. 6887 எனும் வரைபடத்தில் அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டின் எல்லைகளாவன - வடக்கு : மாஹாவெவ முதல் நாத்தாண்டிய - மாதம்பெ வீதி வரையான வீதி (பிரதான வீதி) ; கிழக்கு : சரத்சந்ர ராஜபக்ஷ என்பவரின் காணி ; தெற்கு: பார்சி வீரகோன் என்பவரின் காணி மற்றும் ; மேற்கு : கிளைப் பாதை. ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் ஒரு றுட் மற்றும் இருபத்தி எட்டு தசம் இரண்டு பேர்ச் (0ஏ. 1றூ. 28.2பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 6887 எனும் வரைபடத்திற்கு அமைவானதாகும்.

கூறப்பட்ட காணி கீழே நேர்த்தியாக விபரிக்கப்பட்ட காணியின் மீள் அளவீடாகும்.

குடாவெவ கிராமத்தில் அமைந்த "கோஹோம்பகஹாவத்த" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஆர். எஃப். எச். பெர்ணாண்டோ என்பவரால் தயாரிக்கப்பட்ட 1993, யூலை 03 ஆந் திகதியிடப்பட்ட இல. 1745 எனும் வரைபடத்தில் அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டின் எல்லைகளாவன - வடக்கு : மாஹாவெவ முதல் நாத்தாண்டிய - மாதம்பெ வீதி வரையான வீதி (பிரதான வீதி) ; கிழக்கு : சரத்சந்ர ராஜபக்ஷ என்பவரிகளின் காணி ; தெற்கு : பார்சி வீரகோன் என்பவரின் காணி மற்றும் ; மேற்கு : கிளைப் பாதை. ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் ஒரு றுட் மற்றும் இருபத்தி எட்டு தசம் இரண்டு பேர்ச் (0ஏ. 1றூ. 28.2பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 1745 எனும் வரைபடத்திற்கு அமைவாக மாரவில காணிப் பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் K 144/118 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பிணை உறுதி இல. 2505 இன் மீது பிணையாக ஈடுவைக்கப்பட்டுள்ளது.

வடமேல் மாகாணம், புத்தளம் மாவட்டம், அலுத்குரு கோரலே தூனகாஹா பத்து கட்டானை பிரதேச சபை எல்லைகளுக்குள் மற்றும் பிரதேச செயலாளர் பிரிவின் கதிரான - வடக்கு கிராம அலுவலர் பிரிவிற்குள் கதிரான கிராமத்தில் அமைந்த அலுத்தபல வீதி வரிமதிப்பீட்டு இல. 58/45 ஐ ஏற்ற " அக்கரபானாஹா" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எஸ். பீ. ஆர். பத்திராஜ என்பவரால் தயாரிக்கப்பட்ட 2000, பெப்புருவரி 14 ஆந் திகதியிடப்பட்ட இல. 2432A எனும் வரைபடத்தில் அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் A என குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கு : இல. 2432 எனும் வரைபடத்தில் லொட் 42; கிழக்கு: இல. 2432 எனும் வரைபடத்தில் லொட் 13 ; தெற்கு : இல. 2432 எனும் வரைபடத்தில் லொட் 47 மற்றும் ; மேற்கு : மேரி குணவர்தன என்பவரின் காணி. ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் இருபது தசம் ஆறு பேர்ச் (0ஏ. 0றூ. 20.6பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 2432 எனும் வரைபடத்திற்கு அமைவாக கம்பஹா காணிப் பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் H 173/35 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

1998, ஓகத்து 15 ஆந் திகதியிடப்பட்ட இல. 3889 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட லொட் 2 மற்றும் 1998, ஓகத்து 20 ஆந் திகதியிடப்பட்ட இல. 2432 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட லொட் 13 இன் மீதும் அதன் ஊடாகவும் பிரவேசிப்பதற்கான மார்க்க உரிமைகள் மற்றும் ஏனைய உரிமைகளுடனானது.

பிணை உறுதி இல. 2928 இன் மீது பிணையாக ஈடுவைக்கப் பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

2-139

---

**பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் ப. வ. க.**

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் வங்கி பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்

(வவுனியா கிளை)

வாடிக்கையாளரின் பெயர்: வேலு தர்மபாலன் மற்றும் தர்மபாலன் கல்யாணி

2017, யூன் 28 ஆந் திகதியன்று நடைபெற்ற பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் ப. வ. க. இன் பணிப்பாளர் சபை கூட்டத்தில் பின்வரும் தீர்மானம் விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானிக்கப்பட்டது:-

"கடப்பாடுடையவரான வேலு தர்மபாலன் மற்றும் தர்மபாலன் கல்யாணி அத்துடன் ஈடுவைத்தவரான தர்ம பாலன் கல்யாணி ஆகியோர் பதிவு இல. பீகியூ 48 ஐக் கொண்ட பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் ப. வ. க. இன் சார்பில் வ வவுனியாவைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு கே. தயாபரன் அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு 2017.01.05 ஆந் திகதியிடப்பட்ட ஈட்டுமுறி இல. 3754 இன் மீதான வரவேண்டிய கொடுப்பனவில் தவணைதவறியு ள்ளாராதலாலும்;

பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் ப. வ. க. (இதனகத்துப்பின்னர் சிலவேளைகளில் "வங்கி" என அழைக் கப்படும்) இற்கு மேற்சொல்லப்பட்ட முறி இலக்கம் 3754 இன்மூலம் 2017.06.12 ஆந் திகதியிலிருந்து கொடுப்பனவுத் திகதிவரை ஐம்பத்தொன்பது இலட்சத்து முப்பத்தையாயிரத்து அறுநூற்று இருபத்தைந்து ரூபா தொண்ணூற்று ஒரு சதம் (ரூபா 59,35,625.91) கொண்ட தொகைமீது ஆண்டிற்கு பத்தொன்பது சதவீத (19%) வட்டியுடன் சேர்த்து பணமுதல் கணக்கின்மீது அறுபத்திரண்டு இலட்சத்து அறுபத்துமுவாயிரத்து முப்பத்தாறு ரூபா இரண்டு சதம் (ரூபா 62,63,036.02) கொண்டதொகை மற்றும் 2017.06.11 ஆந் திகதி வரையான வட்டியும் தற்போது வரவேண்டியும் உரியதாகவுமுள்ளதாதலாலும்;

சொல்லப்பட்ட தொகை அறுபத்திரண்டு இலட்சத்து அறுபத்துமுவாயிரத்து முப்பத்தாறு ரூபா இரண்டு சதம் (ரூபா 62,63,036.02) ஐ, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 13 ஆம் பிரிவின்கீழ் அறவிடவேண்டிய பணங்கள் மற்றும் செலவுகள் மற்றும் மேற்கூறப்பட்ட திகதிகளிலிருந்து விற்பனை திகதிவரை வட்டியுடனும் சேர்த்து எவையேனும் கொடுப்பனவுகள் பெறப்பட்டிருப்பின், அவற்றையும் கழித்து அறவிடுதற்காக, இத்துடனுள்ள அட்டவணையில் மேலும் முழுமையாக விவரிக்கப்பட்டுள்ள வங்கிக்கு ஈடுவைக்கப்பட்டுள்ள ஆதனத்தை பகிரங்க ஏலம்மூலம் விற்பனை செய்ய, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் பிரகாரம், கண்டி, மாவில்மட, துட்டுகெமுனு மாவத்தை, இல. 369/1 ஐச் சேர்ந்த உத்தரவுபெற்ற ஏலதாரர் ஐ.டபிள்யூ. ஜயசூரிய அவர்களுக்கு அதிகாரமும் தத்துவமும் அளிக்கிறதென இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது."

**அட்டவணை**

வட மாகாணம், வவுனியா மாவட்டம், வவுனியா தெற்கு தமிழ் பிரதேச செயலாளர் பிரிவின் பிரதேச சபை எல்லைகளுக்குள், கொம்மான்குளம் கிராம அலுவலர் பிரிவு, கொம்மான்குளம் கிராமத்தில் அமைந்துள்ளதும் 0.1585 ஹெக். அல்லது ஒரு றூட் இருபதேழு தசம் இரண்டு ஏழு பேர்ச் (0ஏ. 1றூ. 27.27பே.) விஸ்தீரணமுடையதும் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் கே. ஆறுமுகம் அவர்களால் தயாரிக்கப்பட்டு 2016.09.16 ஆந் திகதியிடப்பட்ட வரைபடம் இல. 2325ஏ இல் துண்டு 1 என அண்மைய நிலஅளவை வரைபடத்திற்கு அமைய குறிப்பிடப்பட்டுள்ளதும் ஆனால் 0.171 ஹெக்டயார் விஸ்தீரணமுடையதும் "கொம்மான்குளம்" என அழைக்கப்படுவதுமான காணியின் காணித்துண்டு முழுவதும். இதன் எல்லைகளாவன - வடக்கு : வீதி ; கிழக்கு : பாதை ; தெற்கு: கே. இரத்தினசிங்கம் மற்றும் ஏனையோரின் ஆதனம் ; மேற்கு : எஸ். ராஜலக்ஷ்மியின் ஆதனம். இவை அனைத்தும் சொல்லப்பட்ட எல்லைகளுக்குள் அமைந்துள்ளது. வவுனியா மாவட்ட காணிப் பதிவகத்தில் எல்டி ஏ30/39 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர்கள் சபையின் கட்டளைப்படி,

உதித்த கொடிக்கார,
முகாமையாளர் - அறவீடுகள்.

2 - 152

## ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ- தலைமை அலுவலகம்

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04 ஆம் பிரிவின் கீழ் ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்

புளூ லோட்டஸ் டுவர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்

ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ பணிப்பாளர்கள் சபையினால், 2017, செத்தெம்பர் 28 ஆந் திகதி நடத்தப்பட்ட கூட்டம் ஒன்றில் விசேடமாகவும், ஏகமனதாகவும் எடுக்கப்பட்ட தீர்மானம்.

"புளூ லோட்டஸ் டுவர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் கடப்பாடு உடையதாகவும் ஹிரன்ஜன் சிரிமிவன் அமரதுங்க அடகு வைத்த அடகு ஆதனம், மேலதிகமாக முழுமையாக இத்துடனான அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ சார்பில், கொழும்பு பிரசித்த நொத்தாரிசு எஸ். எஸ். ஹலோலுவவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2016, யூன் 14 ஆந் திகதியிடப்பட்ட 3683 அடகு முறி, ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ இனால் புளூ லோட்டஸ் டுவர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்டிற்கு வழங்கப்பட்ட கடனை மீளப் பெறுவதற்கான பாதுகாப்பு அடமானமாக வழங்கப்பட்டது.

அத்துடன் முன்சொல்லப்பட்ட ஹிரன்ஜன் சிரிமிவன் அமரதுங்க காரியாம்சமான உரிமையாளர் என்பதுடன், முன்சொல்லப்பட்ட புளூ லோட்டஸ் டுவர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்டை தனதுகட்டுப்பாட்டின் கீழ் வைத்திருப்பவர், அத்துடன் முன்சொல்லப்பட்ட ஹிரன்ஜன் சிரிமிவன் அமரதுங்க, கிட்டத்தட்ட எல்லா பங்குகளையும் கொண்டுள்ளதுடன், புளூ லோட்டஸ் டுவர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்டை தனது கட்டுப்பாட்டில் வைத்துள்ளதுடன் அதனை நிர்வகிப்பவராகவும் உள்ளதற்கு அமைய, ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ இனால் புளூ லோட்டஸ் டுவர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்டிற்கு வழங்கப்பட்ட நிதி வசதியின் மூலம் உண்மையிலேயே பயனடைவர்.

அத்துடன் புளூ லோட்டஸ் டுவர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் மற்றும் ஹிரன்ஜன் சிரிமிவன் அமரதுங்க வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார்கள் ஆதலாலும், 2017, மே 30 ஆந் திகதியன்று உள்ளவாறாக ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ தாபனத்திற்கு சொல்லப்பட்டமுறி மீது ஒரு கோடியே முப்பத்து ஆறு இலட்சத்து அறுபத்து ஓராயிரத்து தொளாயிரத்து எழுபத்து ஆறு ரூபா எண்பத்தொன்பது சதம் (ரூபா 1,36,61,976.89) கொண்ட பணத்தொகை ஒன்று தற்போது வருமதியாகவும், சேர்மதியாகவும் உள்ளதாலும், அத்துடன் ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ பணிப்பாளர்கள் சபையானது, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இதற்கான அட்டவணையில் மேலதிகமாக முழுமையாக விபரிக்கப்பட்டுள்ள 3683 ஆம் இலக்க முறிமூலம் ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. தாபனத்திற்கு ஈடுவைக்கப்பட்டனவுமான ஆதனம் சொல்லப்பட்ட (ரூபா 1,36,61,976.89) பணத்தொகையை 2017, மே 31 ஆந் திகதியிலிருந்து விற்பனை நாள்வரை மேலும் வட்டியுடனும், விளம்பரச் செலவுகள் மற்றும் கூறப்பட்ட வேறு இறுப்பனவுகள் ஆகியவற்றோடும் சேர்த்து (பெறப்பட்ட கொடுப்பனவுகள் எவையும் இருந்தால் அவற்றைக் கழித்து) அறவிடுவதற்காக தீவு முழுவதற்குமான உரிமம் பெற்ற ஏல விற்பனையாளர் எல். பி. சேனநாயக்காவினால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படுதல் வேண்டும் என இத்தால் தீர்மானிக்கின்றது.".

### அட்டவணை

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டத்தில் உள்ள ஹப்பிற்றிகம் கோரளையின் உடுகஹா பற்றுவில் உள்ள மீரிகம பிரதேச சபையின் எல்லைக்கு உட்பட்ட மீரிகம பிரதேச செயலகம் மற்றும் லோலுவாகொட கிராம அலுவலர் பிரிவிற்கு உட்பட்ட லோலுவாகொட கிராமத்தில் உள்ள சியம்பலகாஹாவத்த, வெலபொடவத்த மற்றும் கெற்றகெலகஹாவத்த, டிக்கலகந்த கெந்தலந்த, திவுல்கஹாவத்த, திக்கலகந்தேவத்த, கம்பிகொட்டுவ, கொங்கஹாவத்த, அம்பகஹாவத்த, மறுபெயர் கெத்தகெலகஹாவத்த, கலபொடவத்த, கொலைன்கும்புர, பிதரபெல மற்றும் பித்தரபெலபில்லேவ என அழைக்கப்படும் காணி, உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் டபிள்யூ. டி.பெல்லனவினால் தயாரிக்கப்பட்ட 2004, ஒற்றோபர் 20 ஆந் திகதியிடப்பட்ட 984/2004 ஆம் இலக்க வரைபடத்தில் விபரமாக விளக்கப்பட்டுள்ள காணித்துண்டு ஏ என அடையாளம் இடப்பட்ட பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட பகிரப்பட்ட காணியின் எல்லைகள் - வடக்கு : காணித்துண்டு பி ; கிழக்கு : கிரவல் வீதி மற்றும் காணித்துண்டு பி ; தெற்கு : கிரவல் வீதி; மேற்கு : டிக்கலகந்த செல்லும் வீதி மற்றும் விவசாயிகளுக்கு பிரிக்கப்பட்டு வழங்கப்பட்ட அரச காணி. அத்துடன் சொல்லப்பட்ட வரைபட இலக்கம் 984/2004 இற்கு அமைவாக ஒன்பது ஏக்கர் இரண்டு றூட் மற்றும் ஏழு தசம் ஐந்து பேர்ச் (9ஏ. 2றூ. 7.5பே.) விஸ்தீரணமானதுடன் F 292/154 என்ற தலைப்பின் கீழ் அத்தனகல்ல மாவட்ட காணி பதிவகத்தில் பதிவு செய்யப்பட்டது.

சபையின் கட்டளைப்படி,

கே. ஏ. எல். ரி. ரணவீர,
பி.பொ.மு. (சட்டம்)/சபைச் செயலாளர்.

2-156/1

---

## அரச புகைப்பட விழா - 2018

**நோக்கம்**

அரச அனுசரணையுடன் உயர்தரமான ஆக்கபூர்வமான புகைப்பட கலையினை உருவாக்கல் மற்றும் புகைப்பட இரசனையுடைய சந்ததியினரை உருவாக்குவதற்குப் பங்களிப்பு வழங்கல்.

**போட்டிப் பிரிவுகள்.**

**01. வருடத்திற்கான தலைப்பு பிரிவு மனித செயற்பாடுகளால் சூழல் பாதிப்பு**

சூழலுக்கு எதிராக பாரட்சமின்றி செய்யப்படும் மனித செயற்பாடுகளால் சூழல் மையத்திற்கு ஏற்படுத்தப்படும் பாதிப்புகளால் அனைத்து உலக வாழ் மக்களும் பாதிப்படைகின்றனர் என்பதில் சந்தேகமில்லை. அவ்வாறான செயற்பாடுகளால் சூழலுக்கு ஏற்படும் நேரடி அல்லது மறைமுகமான பாதிப்புக்கள் இபபிரிவிற்காக சமர்ப்பிக்கலாம்.

**02. வாழ்க்கை முறைகள் மற்றும் கலாச்சார அம்சங்கள் :**

வாழ்க்கையின் அன்றாடம் நிகழக்கூடிய நிகழ்வுகள், வீதியோரக் காட்சிகள், மத வழிபாடு, நம்பிக்கைகள் உட்பட அனைத்து கலாசார விடயங்கள் இப்பிரிவுக்குள் அடங்கும்.

**03. இயற்கை,வன வாழ்வு மற்றும் நிலக் காட்சிகள்:**

மிருகங்கள், மற்றும் பறவைகளின் வெவ்வேறு காட்சியமைப்புப் புகைப்படங்கள், வன வாழ்வு, மேற்பூச்சுப் புகைப்படங்கள், துல்லியமான நிலக்காட்சிகள், இயற்கை சூழல் என்பனவற்றை இப்பிரிவிக்காக சமர்ப்பிக்கலாம்.

**04. ஊடகத்துறை, செய்தி மற்றும் விளையாட்டு:**

பிரபல ஊடகங்களில் பிரசுரிக்கப்பட்ட அல்லது பிரசுரிக்கப்படாத செய்திக்கு பொருத்தமான அனைத்து நிகழ்வுகள் கொண்ட புகைப்படங்கள் மற்றும் விளையாட்டு சம்பந்தமான யாதேனும் புகைப்படங்கள் இந்தப் பிரிவுக்கு சமர்ப்பிக்கலாம். 2016 ஆம் ஆண்டின் எடுக்கப்பட்ட புகைப்படங்கள் மாத்திரம் இதற்காக சமர்ப்பிக்க வேண்டும்.

**05. திறந்த பிரிவு:**

அனைத்து தலைப்புகளின் கீழ் எடுக்கப்படும் எடிட் செய்யப்பட்ட அல்லது எடிட் செய்யப்படாத ஆக்கபூர்வமான புகைப்படங்கள் இப்பிரிவுக்கு சமர்ப்பிக்க முடியும் என்பதுடன், சுருக்க புகைப்படம் (Abstracts), நிகழ் வாழ்க்கை (Still life), இரவுக் காட்சி புகைப்படம் (Night photography), அலங்காரப் புகைப்படம் (Fashion beauty), விளம்பர புகைப்படம் (Commercial photography), கட்டடக்கலை புகைப்படம் (Architectural photography), தனிநபர் உருவப்படங்கள் (Studio and outdoor portraits) இந்த பிரிவுக்குச் சமர்ப்பிக்கலாம்.

**போட்டி நிபந்தனைகள் மற்றும் ஆலோசனைகள் :-**

01. போட்டிக்குத் தேவையான விண்ணப்பப்படிவங்கள் அனைத்தும் பிரதேச செயலகங்கள் மறறும் மாவட்டச் செயலகங்களில் அல்லது கலாச்சார அலுவல்கள் திணைக்களத்தின் தலைமை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ள முடியும். அல்லது திணைக்களத்தின் இணையத்தளமான www.culturaldept.gov.lk இல் இருந்து தரவிறக்கம் (download) செய்து கொள்ளலாம்.

02. அரச புகைப்படபோட்டிக்கு விண்ணப்பிக்கும்போது எவ்வித கட்டணங்களும் அறவிடப்படமாட்டாது என்பதுடன், சமர்ப்பிக்க வேண்டிய கடைசி தினமான **2018, மே மாதம் 15 ஆந் திகதிக்கு** முன்னர் உங்களின் புகைப்படங்கள் மற்றும் பூரணப்படுத்திய விண்ணப்பப்படிவம் என்பவற்றை அருகில் உள்ள பிரதேச செயலகத்தில் அல்லது மாவட்டச் செயலகத்தில் கடமையாற்றும் கலாச்சார உத்தியோகத்தர்களிடம் கையளித்தல் வேண்டும். அவ்வாறு இல்லையெனில் "**பணிப்பாளர், கலாசார அலுவல்கள் திணைக்களம், 8 ஆம் மாடி, செத்சிறிபாய, பத்தரமுல்லை**" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது நேரில் வந்து ஒப்படைக்கலாம்.

03. அரச புகைப்பட விழாவுடன் தொடர்புபட்டவர்கள் அல்லது அவர்களின் குடும்பத்தினர் மேற்படி போட்டிகளில் பங்குகொள்ள முடியாது.

04. போட்டியாளர்கள் மேற்படி அனைத்து போட்டி தலைப்புகளிலும் பங்குபற்றமுடியும் என்பதுடன், ஒருவர் ஒரு போட்டிப் பிரிவில் 4 புகைப்படங்கள் மாத்திரம் சமர்ப்பிக்க முடியும் என்பதை கருத்திற் கொள்ளவும்.

05. சமர்ப்பிக்கப்படும் புகைப்படங்கள் முழு வர்ணம் அல்லது ஒரு வர்ண புகைப்படங்களாக இருத்தல் வேண்டும். அவற்றின் நீளம் 15 அங்குலத்திற்கு குறையாமலும் இருப்பதுடன் 18 அங்குலத்திற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். புகைப்படத்தின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பதாரியின் பெயர், முகவரி, போட்டிப் பிரிவு மற்றும் புகைப்படத்தின் தலைப்பு என்பன தெளிவாக குறிப்பிட்டு இருத்தல் வேண்டும்.

போட்டிக்காக சமர்ப்பிக்கப்படும் புகைப்படங்களின் அசல் பிரதிகளை கீழ் குறிப்பிடப்பட்ட போஸ்டர் (Folder) 02 இல் இடப்பட்டு இறுவெட்டு (CD) ஊடாகவும் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
போல்டர் 01 புகைப்படத்தினை எடிட் செய்யப்பட்ட JPG பிரதி
(புகைப்படத்தின் குறைந்த பகுதியின் நீளம் 2400px ஆக இருத்தல் வேண்டும்)
போல்டர் 02 எடிட் செய்யப்படாத புகைப்படம JPG பிரதிகள் அல்லது RAW பிரதிகள்

06. புகைப்படத்திற்கு பாதகம் ஏற்பாடாதவாறு அவற்றை வெவ்வேறாக பாதுகாப்பாக கையளித்தல் வேண்டும் என்பதுடன், புகைப்படம் மற்றும் விண்ணப்பப்படிவம் என்பன இடப்பக்க உறையில் இடதுபக்க மேல் மூலையில் "**அரச புகைப்பட விழா - 2018**" என்று குறிப்பிடல் அவசியமாகும்.

07. யாரேனும் தனிப்பட்ட ஒருவரையோ அல்லது சமூகத்தினரையோ அசௌகரியத்திற்கு உட்படுத்தப்படும் புகைப்படங்கள் எவையேனும் போட்டிக்கு சமர்ப்பித்தல் கூடாது. அவ்வாறு சமர்ப்பிக்கும் பட்சத்தில் ஏற்படும் அசௌகரியத்திற்கு குறித்த புகைப்படக் கலைஞரே பொறுப்பாகும். திருமண நிகழ்வுகளுக்காக சமர்ப்பிக்கப்படும் புகைப்படங்கள் மணமக்கள் தோன்றும் காட்சிகள் இருப்பின் கண்காட்சியின்போது தேவைப்படும் சந்தர்ப்பங்களில் அவர்களின் அனுமதியை பெறுவதற்கு அனுமதி கடிதத்தை கலாச்சார அலுவல்கள் திணைக்களத்திற்கு வழங்குதல் வேண்டும். அவ்வாறு அனுமதி வழங்கப்படாத பட்சத்தில் போட்டிகளிலிருந்து புகைப்படம் நீக்கப்படும்.

08. போட்டிகளுக்கு சமர்ப்பிக்கப்படும் அனைத்து புகைப்படங்களும் மீண்டும் திருப்பி ஒப்படைப்பதற்கு கலாச்சார அலுவல்கள் திணைக்களம் பொறுப்பேற்கப்படமாட்டாது என்பதுடன் தபால் மூலம் அனுப்பப்படும் புகைப்படங்களுக்கு ஏற்படும் பாதிப்புகள் கலாச்சார அலுவல்கள் திணைக்களம் பொறுப்பேற்காது.

09. வெற்றியடைகின்ற ஆக்கங்களின் பூரண உரிமை கலாச்சார அலுவல்கள் திணைக்களத்தை சார்ந்திருப்பதோடு அதன் அறிவுசார் உடைமைகளின் உரிமை புகைப்படக் கலைஞரை சார்ந்திருக்கும்.

10. அனைத்துப் பிரிவுகளிலும் படைப்புக்களை மதிப்பிடல் நடவடிக்கைகள் தேசிய மட்டத்தில் பிரபல நிபுணத்துவ குழுக்களினால் நடாத்தப்படுவதுடன் வெற்றியாளர்கள் தேர்ந்தெடுப்பது பற்றிய இறுதித் தீர்மானம் அவர்களையே சாரும்.

11. புகைப்படங்களை மதிப்பிடலின்போது நடுவர்கள் குழு கீழ்க்காணும் காரணிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

* அசல்/புத்துணர்ச்சி (Originality)
* படைப்பாற்றல் - புத்தாக்கம் (Creativity)
* புகைப்படத்தின் தரம் (Photographic Quality)

12. போட்டிக்காக சமர்ப்பிக்கப்படும்போது அனைத்து நிபந்தனைகளுக்கும் இணங்கியதாக கருத்திற் கொள்ளப்படும்.

13. அரச புகைப்படம் பற்றிய அனைத்துகொள்கை முடிவுகளும் மற்றும் இறுதி பொறுப்பு கலாச்சார அலுவல்கள் திணைக்களத்தையே சாரும்.

14. அரச புகைப்பட விழா 2018, ஓகத்து மாதம் 19 ஆந் திகதி நடைபெறுவதுடன், கண்காட்சி 2018, ஓகத்து மாதம் 19 ஆம், 20 ஆம் மற்றும் 21 ஆந் திகதிகளில் நெளும் பொக்குண கலையரங்கு வளாகத்தில் நடைபெறும்.

**போட்டிக்காக சமர்ப்பிக்கப்படும் படைப்புகள் நிராகரிக்கப்படும் வாய்ப்புகள்**

01. போட்டிக்காக சமர்ப்பிக்கப்படும் புகைப்படத்தை சுற்றி மேலதிக வர்ணங்கள்அல்லது வெள்ளை கறுப்புகரைகள் (Border) இல்லாதிருப்பதுடன், குறிப்புகள், திகதி, கையொப்பம் அல்லது பெயர்கள் பொறிக்கப்பட்ட புகைப்படங்கள் மற்றும் லெமினேட்டிங் (Laminating) செய்யப்பட்ட மவுன்ட் (Mount) செய்யப்பட்ட பிரேம் (Frame) செய்யப்பட்ட புகைப்படங்கள் நிராகரிக்கப்படும்.

02. புகைப்படத்தில் உள்ளத்திற்கு அப்பால் மேலதிகமாக குறியீடுகள் (பெயர், நீர் துளிகள் அல்லது இலட்சினைகள்) புகைப்படத்தில் சேர்ந்திருந்தால் அவை நிராகரிக்கப்படும்.

03. இயற்கை வன வாழ்வு மற்றும் நிலக் காட்சிகள் அல்லது ஊடகத்துறை மற்றும் விளையாட்டு ஆகிய இரண்டு போட்டிப் பிரிவுகளுக்கும் எடிட் (புகைப்படத்தில் பகுதிகளை வெட்டுதல் அல்லது சேர்த்தல் ஆகிய) செய்யப்படாத புகைப்படங்கள் சமர்ப்பித்தல் வேண்டும்.

அனைத்து புகைப்படத்திலும் சரியான வர்ண முகாமைத்துவம், ஊர்மைப்படுத்தல் (Burning) மற்றும் மறைத்தல் (Dodging) துல்லியமாக்கல் (Sharpening) மற்றும் வெட்டுதல் (cropping) ஆகியவை தேவைப்படும் பட்சத்தில் மிகவும் குறைவாக செய்தல் வேண்டும்.

04. போட்டிக்கு சமர்ப்பிக்கப்படும் புகைப்படங்கள் வேறு ஒருவரினால் எடுக்கப்பட்டதாகவோ அல்லது இணையத்தளத்தில் அல்லது வேறு முறைகளிலிலோ பெற்றுக்கொள்ளப்படாமல் இருத்தல் வேண்டும். இதற்கு முன்னர் தேசிய அல்லது சர்வதேச மட்டத்தில் ஏதாவதொரு வெற்றியோ அல்லது சான்றிதழலோ வெற்றி பெற்றுள்ள புகைப்படங்களோ இது தொடர்பாக முன் வைக்க முடியாததோடு எவ்வாறாயினும் அத்தகைய புகைப்படங்கள் போட்டிக்காக முன்வைக்கப்பட்டால் அவை போட்டியில் இருந்து நீக்கப்படும்.

05. கால தாமதமாக கிடைக்கக்கூடிய மற்றும் போட்டி நிபந்தனைகளுக்கு மாறான புகைப்படங்கள் போட்டியில் இருந்து நீக்கப்படும்.

**புகைப்படங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி : 2018, மே மாதம் 15.**

அனைத்து பிரிவுகளுக்கும் முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் இடங்கள் தெரிவு செய்யப்படவுள்ளதுடன் அதற்காக வழங்கப்படும் பணப்பரிசு கீழ் காணப்படும் வகையில் வழங்கப்படும்.

* முதலாமிடம் - தங்க விருது மற்றும் ரூபா 30,000
* இரண்டாமிடம் - வெள்ளி விருது மற்றும் ரூபா 20,000
* மூன்றாமிடம் - வெண்கல விருது மற்றும் ரூபா 15,000
* இது தவிர ஒரு பிரிவில் இருந்து 10 திறமைச் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

மேற்குறிப்பிட்ட நிபந்தனைகள் அரச புகைப்பட விழா தொடர்பான ஒரே ஆவணமாகும் என்பதுடன், விண்ணப்பப்படிவம் ஆவணத்தின் ஒரு பகுதியாக கருதப்படும். அரச புகைப்பட விழா தொடர்பாக வேறு தெளிவுபடுத்தல் அவசியமாயின் புகைப்பட ஊக்குவிப்பு பிரிவில் கடிதம் மூலமாகவோ அல்லது தொலைபேசி மூலமாகவோ பெற்றுக் கொள்ள முடியும். இவ் ஆவணத்தை விளக்கப்படுத்துதல், திருத்துதல், பகுதியாக்கல், நீக்கல் அல்லது புதிய ஆவணமொன்றை தயாரிக்கும் பூரணப் பொறுப்பு கலாச்சார அலுவல்கள் திணைக்களத்தையே சார்ந்ததாகும்.

இலங்கை வாழ் பிரஜைகள், பயிலுனர் அல்லது தொழில் ரீதியாக புகைப்படத்துறையில் ஈடுபட்டுள்ள கலைஞர்கள் அனைவரும் மேற்படி போட்டிக்கு சுய படைப்புக்களை சமர்ப்பிக்குமாறு கலாச்சார அலுவல்கள் திணைக்களம் அழைப்பு விடுவிக்கின்றது.

மேலதிக விபரங்கள் : அரச புகைப்பட மேம்பாட்டுப் பிரிவு - 0114327597.

கலாச்சார அலுவல்கள் பணிப்பாளர்.

கலாச்சார அலுவல்கள் திணைக்களம்.
8 ஆம் மாடி, செத்சிறிபாய,
பத்தரமுல்லை.
2018.01.25.

விண்ணப்பப்படிவம்

***அரச புகைப்பட விழா - 2018***

| அலுவலக உபயோகத்திற்கு மாத்திரம் | |
|---|---|
| பதிவு இல. | பெற்ற திகதி |
| மாவட்டம் | புகைப்பட எண்ணிக்கை |
| பெற்றவர் | |
| ஒப்பம் | |

விண்ணப்பதாரியின் முழுப் பெயர் : ..........................................................................................................
விண்ணப்பதாரியின் பெயர் :..........................................................................................................
(ஆங்கில பெரிய எழுத்தில்)
தேசிய ஆள் அடையாள அட்டை இல. : ................................ தொலைபேசி இல. :..........................................
முகவரி : ..........................................................................................................
..........................................................................................................
மின்னஞ்சல் முகவரி : ..........................................................................................................
மாவட்டம் : .................................................. பிரதேச செயலகம் : ..........................................

| 01. வருடத்தின் தலைப்பு - மனித செயற்பாடுகளால் சூழல் பாதிப்பு | |
|---|---|
| தொ. இல. | தலைப்பு |
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |

| 02. வாழ்க்கை முறைகள் மற்றும் கலாச்சார அம்சங்கள் | |
|---|---|
| தொ. இல. | தலைப்பு |
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |

| 03. இயற்கை, வன வாழ்வு மற்றும் நிலக் காட்சிகள் | |
|---|---|
| தொ. இல. | தலைப்பு |
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |

| 04. ஊடகத்துறை செய்தி மற்றும் விளையாட்டு | |
|---|---|
| தொ. இல. | தலைப்பு |
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |

| 05. திறந்த பிரிவு | |
|---|---|
| தொ. இல. | தலைப்பு |
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |

என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் உண்மை மற்றும் சரியானது என்பதுடன் சமர்ப்பிக்கப்பட்ட புகைப்படங்கள் வேறு எந்த சந்தர்ப்பத்திலும் தேசிய அல்லது சர்வதேச மட்டத்தில் ஏதாவதொரு வெற்றியோ அல்லது சான்றிதழோ வெற்றி பெறவில்லை என்பதுடன் போட்டி நிபந்தனைகள் மீறும் பட்சத்தில் போட்டியில் இருந்து நீக்குவதற்கு ஆட்சேபனை இல்லை என்பதையும் சான்றுப்படுத்துகின்றேன்.

திகதி : .................. கையொப்பம்.

3-200

---

**டீஎவ்சீசீ வங்கி பீஎல்சீ**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் பற்றிய அறிவித்தல்*

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் நியதிகளின்படி, பின்வரும் தீர்மானமானது டீஎவ்சீசீ வங்கி பீஎல்சீயின் பணிப்பாளர் சபையினால் 2018, சனவரி 29 ஆந்தேதியன்று ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுளள்தென இத்தால் அறிவிக்கப்படுகின்றது;

**சபையின் தீர்மானம்**

பதுளையைச் சேர்ந்த கிருஷ்ணசாமி கிருஷாந்த் என்பவர், டீஎவ்சீசீ வங்கி பீஎல்சீ சார்பில் பிரசித்த நொத்தாரிசு சஞ்ஜீவ பீ. பொன்சேக்கா அவர்களினால் எல்லாம் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2015.09.14 ஆந் தேதிய 2432 ஆம் இலக்க ஈட்டுமுறிமீதும் 2016.02.19 ஆந் தேதிய 2520 ஆம் இலக்க ஈட்டு முறி மீதும் 2016, நவெம்பர் மாதம் 29 ஆந் திகதிய 2646 ஆம் இலக்க ஈட்டுமுறிமீதும் வருமதியாகவுள்ள கொடுப்பனவுகளைச் செலுத்துவதில் தவணை தவறியுள்ளனராதலாலும்.

2017, நவெம்பர் 30 ஆந் தேதியன்றுள்ளவாறாக நாற்பத்து மூன்று இலட்சத்துப் பத்தொன்பதாயிரத்துத் தொளாயிரத்தெழுபத்தாறு ரூபா தொண்ணூற்றொரு சதம் (ரூ. 43,19,976.91) கொண்ட தொகையும், 2017, திசெம்பர் 01 ஆந் தேதியிலிருந்து விற்பனைத் தேதிவரை முப்பத்து மூன்று இலட்சத்து எழுபத்தோராயிரத்து முந்நூற்றிமுப்பது ரூபா ஏழு சதம் (ரூ. 33,71,330.07) கொண்ட தொகைமீது ஒவ்வோராண்டும் கனவரி, ஏப்ரல், யூலை, ஒற்றோபர் ஆகிய மாதங்களின் 1 ஆவது வேலைநாளன்று மூன்று மாதங்களுக்கொருதடவை மீளாய்ப்படும் சராசரி எடைவீதமளிக்கப்பட்ட பிரதான கடன்கொடுக்கும் வீதத்துக்குமேல் (சஎபீவீஸ்பொட்) ஆண்டொன்றுக்கு ஏழு தசம் ஐந்து (7.5%) வட்டியும், (ஆண்டொன்றுக்குப் பதினான்கு தசம் ஐந்து சதவீத (14.5%) அடிமட்ட வீதத்துக்கமைய), அத்துடன் ஏழு இலட்சத்து அறுபத்திநான்காயிரத்து நானூற்றிப்பத்தொன்பது ரூபா இருபத்திமூன்று சதம் (ரூ. 7,64,419.23) கொண்ட தொகைமீது ஒவ்வோராண்டும் சனவரி, ஏப்பிறல், யூலை, ஒற்றோபர் ஆகிய மாதங்களின் 1 ஆவது வேலைநாளன்று மூன்று மாதங்களுக்கொருதடவை மீளாயப்படும் சராசரி எடைவீதமளிக்கப்பட்ட பிரதான கடன்கொடுக்கும் வீதத்துக்குமேல் (சஎபிவீ ஸ்பொட்) ஆண்டொன்றுக்கு எட்டுச் சதவீத (8%) வட்டியும், (ஆண்டொன்றுக்குப் பதினைந்து தசம் ஐந்து சதவீத (15.50%) அடிமட்ட வீதத்துக்கமைய), அத்துடன் முப்பத்து இரண்டு இலட்சத்து ஐம்பத்தாறாயிரத்து எண்ணூற்றியறுபத்திநான்கு ரூபா மூன்று சதம் (ரூ. 32,56,864.03) கொண்ட தொகைமீது ஆண்டொன்றுக்கு இருபத்தெட்டுச் சதவீதத்தில் (28%) கணக்கிடப்பட்ட வட்டியும்

சொல்லப்பட்ட கிருஷ்ணசாமி கிருஷாந்த் என்பவரிடமிருந்து 2432, 2520 மறறும் 2646 ஆம் இலக்க ஈட்டுமுறிகள்மீது டீஎச்சீ வங்கி பீஎல்சீக்குச் சேருமதியாகவும் வருமதியாகவும் இருக்கின்றதாதலாலும்.

டீஎவ்சீசீ வங்கி பீஎல்சீயின் பணிப்பாளர் சபையானது, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அவர்களுக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின்கீழ் 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அற்விடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 13 ஆம் பிரிவின் நியதிகளின்படி மேற்சொல்லப்பட்ட 2432, 2520 மற்றும் 2646 ஆம் இலக்க ஈட்டுமுறிகளின் பொருத்தனைகளுக்கிணங்க டீஎவ்சீசீ வங்கி பீஎல்சீயினால் உறப்பட்ட, நாற்பத்து மூன்று இலட்சத்துப் பத்தொன்பதாயிரத்துத் தொளாயிரத்தெழுபத்தாறு ரூபா தொண்ணூற்றொரு சதம் (ரூ. 43,19,976.91) கொண்ட தொகையையும், 2017, திசெம்பர் 01 ஆந் தேதியிலிருந்து விற்பனைத் தேதிவரை முப்பத்து மூன்று இலட்சத்து எழுபத்தோராயிரத்து முந்நூற்றிமுப்பது ரூபா ஏழு சதம் (ரூ. 33,71,330.07) கொண்ட தொகைமீது ஒவ்வோராண்டும் சனவரி, ஏப்பிறல், யூலை, ஒற்றோபர் ஆகிய மாதங்களின் 1 ஆவது வேலைநாளன்று மூன்று மாதங்களுக்கொரு தடவை மீளாயப்படும் சராசரி எடைவீதமளிக்கப்பட்ட பிரதான கடன்கொடுக்கும் வீதத்துக்குமேல் (சஎபிவீ ஸ்பொட்) ஆண்டொன்றுக்கு ஏழு தசம் ஐந்து சதவீத (7.5%) வட்டியையும், (ஆண்டொன்றுக்குப் பதினான்கு தசம் ஐந்து சதவீத (14.5%) அடிமட்ட வீதத்துக்கமைய), அத்துடன் ஏழு இலட்சத்து அறுபத்திநான்காயிரத்து நானூற்றிப் பத்தொன்பது ரூபா இருபத்திமூன்று சதம் (ரூ. 7,64,419.23) கொண்ட தொகைமீது ஒவ்வோராண்டும் சனவரி, ஏப்பிறல், யூலை, ஒற்றோபர் ஆகிய மாதங்களின் 1 ஆவது வேலைநாளன்று மூன்று மாதங்களுக்கொருதடவை மீளாய்ப்படும் சராசரி எடைவீதமளிக்கப்பட்ட பிரதான கடன்கொடுக்கும் வீதத்துக்குமேல் (சஎபிவீ ஸ்பொட்) ஆண்டொன்றுக்கு எட்டுச சதவீத (8%) வட்டியையும், (ஆண்டொன்றுக்குப் பதினைந்து தசம் ஐந்து சதவீத (15.5%) அடிமட்ட வீதத்துக்கமைய), அத்துடன் முப்பத்திரண்டு இலட்சத்து ஐம்பத்தாறாயிரத்து எண்ணூற்றியறுபத்தி நான்கு ரூபா மூன்று சதம் (ரூ. 32,56,864.03) கொண்ட தொகைமீது ஆண்டொன்றுக்கு இருபத்தெட்டுச் சதவீதத்தில் (28%) கணக்கிடப்பட்ட வட்டியையும் அல்லது விற்பனை செய்யப்படும் நேரத்தில் செலுத்தப்படாதெஞ்சியுள்ள அதன் ஏதேனும் பாகத்தினையும் கீழே விபரிக்கப்படும் காணியையும் வளவுகளையும் விளம்பரப்படுத்துவதற்கான செலவுகள், விற்பதற்கான செலவுகள், செலவிடப்பட்ட மற்றெல்லாப் பணங்கள், செலவுத் தொகைகள் மற்றும் வேறு இறுப்பனவுகள் என்பவற்றோடு சேர்த்து அறவிடுவதற்காக மேற்கூறப்பட்ட ஈட்டுமுறிகள் மூலம் கிருஷ்ணசாமி கிருஷாந்த் என்பவரினால் டீஎவ்சீசீ வங்கி பீஎல்சீக்கு ஈடுவைக்கப்பட்ட சொல்லப்பட்ட காணியும், வளவுகளும், கண்டியைச் சேர்ந்த உத்தரவுபெற்ற ஏலதாரர் திரு. ஐ. டபிள்யூ. ஜயசூரிய அவர்களினால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவேண்டுமென இத்தால் தீர்மானிக்கின்றது.".

**2432, 2520 மற்றும் 2646 ஆம் இலக்க ஈட்டுமுறிமூலம் ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் மத்திய மாகாணம், நுவரெலியாப் பிரிவிலும் மாவட்டத்திலும் நுவரெலியா திம்புல்லக் கோறளையின் பிரதேச செயலக இடப்பரப்பில் நுவரெலியா பிரதேசசபை எல்லைகளில் ஹொல்புருக் 475 I கிராம அலுவலர் பிரிவில் அக்ரபத்தான கிராமத்தில் ஹொல்புருக்கில் அமைந்துள்ளதும் (உநி, டபிள்யூ. எம். பெரேரா என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1954.01.21 ஆந் தேதிய 79 ஆம் இலக்க வரைபடத்தில் மீள்நிலஅளவையாகவும் உபபிரிவிடப்பட்ட காணித்துண்டம் 7 ஆகவும் உள்ளதும்) உநி, எஸ். மதியழகன் என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2015, மே 22 ஆந் தேதிய SMA/228/2015 ஆம் இலக்க வரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்டதும் காணித்துண்டம் 1 எனவடையாளமிடப்பட்டதும் "ஹொல்புருக் தோட்டத்தின்" பாகம் எனவழைக்கப்படுவதும் பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும் : பரப்பளவில் இது, அதன்மீதுள்ள வேறெல்லாவற்றுடனும் மேற்கூறப்பட்ட SMA/ 228/2015 ஆம் இலக்க நிலஅளவைக்கும் விவரணத்துக்கும் இணங்கவும், பதினைந்து தசம் ஏழு பூச்சியம் பேர்ச்சுக்களை (0ஏ. 0றூ. 15.70பே.) கொண்டுள்ளதுடன் அதன் எல்லைகள் பின்வருமாறு- வடக்கு : பிரதான வீதி; கிழக்கு : 79 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் 8; தெற்கு : பாதை ; மற்றும் மேற்கில் : 79 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் 7 இன் எஞ்சியுள்ள பாகம்.

காணித்துண்டம் 1 எனவடையாளமிடப்பட்ட காணித்துண்டு பின்வரும் காணியின் பாகமாகவுள்ளது:

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் மத்திய மாகாணம், நுவரெலியாப் பிரிவிலும் மாவட்டத்திலும் நுவரெலியா திம்புல்லக் கோறளையின் பிரதேச செயலக இடப்பரப்பில் நுவரெலியா பிரதேசசபை எல்லைகளில் ஹொல்புருக் 475 I கிராம அலுவலர் பிரிவில் அக்ரபத்தான ஹொல்புருக்கில் அமைந்துள்ளதும் (உநி, டபிள்யூ. எம். பெரேரா என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1954.01.24 ஆந் தேதிய, இன்னும் சரியாக 1954, சனவரி 21 ஆந் தேதிய 79 ஆம் இலக்க வரைபடத்திற் குறித்துக்காட்டப்பட்டதும் காணித்துண்டம் 7 எனவடையாளமிடப்பட்டதும் "ஹொல்புருக் தோட்டத்தின்" பாகம் எனவழைக்கப்படுவதும் பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும்: பரப்பளவில் இது, அதன்மீதுள்ள வேறெல்லாவற்றுடனும் மேற்கூறப்பட்ட 79 ஆம் இலக்க நிலஅளவைக்கும் விவரணத்துக்கும் இணங்கவும், இருபத்திரெண்டு பேர்ச் (0ஏ. 0றூ. 22பே.) கொண்டுள்ளதுடன் அதன் எல்லைகள் பின்வருமாறு - வடக்கு : பிரதான வீதி; கிழக்கு : காணித்துண்டம் 8; தெற்கு : திம்புல்ல கிராமக் குழுவினால் உரிமை கோரப்பட்ட காணித்துண்டம் 6 ; மேற்கில் : காணித்துண்டம் 6 அத்துடன் நுவரெலியாக் காணிப் பதிவகத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

லக்ஷ்மன் சில்வா,
பிரதான நிறைவேற்றலுவலர்.

டீஎவ்சீசீ வங்கி பீஎல்சீ,
இல. 73/5, காலி வீதி,
கொழும்பு 3.

3 - 107

**டீஎவ்சீசீ வங்கி பீஎல்சீ**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் பற்றிய அறிவித்தல்*

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் நியதிகளின்படி, பின்வரும் தீர்மானமானது டீஎவ்சீசீ வங்கி பீஎல்சீயின் பணிப்பாளர் சபையினால் 2018, சனவரி 29 ஆந் தேதியன்று ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது;*

**சபையின் தீர்மானம்**

*செங்கலடியைச் சேர்ந்த திரு. பொடியப்பு புண்ணியராஜா மற்றும் திருமதி பரமலிங்கம் சந்திரகலா என்போர், டீஎவ்சீசீ வங்கி பீஎல்சீ சார்பில் மட்டக்களப்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு ஜே. என். கிறிஸ்டீனா நீருஜா என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2016.05.31 ஆந் தேதிய 289 ஆம் இலக்க ஈட்டுமுறிமீது வருமதியாகவுள்ள கொடுப்பனவுகளைச் செலுத்துவதில் தவணைவறியுள்ளனராதலாலும்.*

*2017, செத்தெம்பர் 29 ஆந்தேதியன்றுள்ளவாறாக ஐந்து மில்லியன் ஐந்து இலட்சத்துத் தொண்ணூற்றொன்பதாயிரத்து அறுநூற்றெண்பத்தைந்து ரூபா (ரூ. 5,599,685) கொண்ட தொகையும், 2017, செத்தெம்பர் 30 ஆந்தேதியிலிருந்து விற்பனைத் தேதிவரை ஐம்பத்து மூன்று இலட்சத்து இருபத்தாறாயிரத்து முந்நூற்றியெழுபத்திமூன்று ரூபா (ரூ. 53,26,373) கொண்ட தொகைமீது, ஒவ்வொரு மாதத்தினதும் முதலாவது வேலைநாளன்று மாதாந்தம் மீளாய்ப்படும் ஆண்டொன்றுக்கு உயர்வான 0.5 சதவீதத்துக்கு மிகக்கிட்டியதாக நேர்த்தியாக்கப்பட்டு சராசரி எடைவீதமளிக்கப்பட்ட பிரதான கடன்கொடுக்கும் வீதத்துக்குமேல் (சஎபிவீ) ஆண்டொன்றுக்கு எட்டுச் சதவீத (ஆண்டொன்றுக்கு 8.0%) வட்டியும் சொல்லப்பட்ட திரு. பொடியப்பு புண்ணியராஜா மற்றும் திருமதி பரமலிங்கம் சந்திரகலா என்போரிடமிருந்து மேற்கூறப்பட்ட 289 ஆம் இலக்க ஈட்டுமுறியின் மீது டீஎவ்சீசீ வங்கி பீஎல்சீக்குச் சேருமதியாகவும் வருமதியாகவும் இருக்கின்றதாதலாலும்.*

*டீஎவ்சீசீ வங்கி பீஎல்சீயின் பணிப்பாளர் சபையானது, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அவர்களுக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின்கீழ் 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 13 ஆம் பிரிவின் நியதிகளின்படி மேற்சொல்லப்பட்ட 289 ஆம் இலக்க ஈட்டுமுறியின் பொருத்தனைகளுக்கிணங்க டீஎவ்சீசீ வங்கி பீஎல்சீயினால் உறப்பட்ட, ஐம்பத்து ஐந்து இலட்சத்துத் தொண்ணூற்றொன்பதாயிரத்து அறுநூற்றெண்பத்தைந்து ரூபா (ரூ. 55,99,685) கொண்ட தொகையையும், 2017, செத்தெம்பர் 30 ஆந் திகதியிலிருந்து விற்பனைத் தேதிவரை ஐம்பத்து மூன்று இலட்சத்து இருபத்தாறாயிரத்து முந்நூற்றியெழுபத்திமூன்று ரூபா (ரூ. 53,26,373) கொண்ட தொகைமீது, ஒவ்வொரு மாதத்தினதும் முதலாவது வேலைநாளன்று மாதாந்தம் மீளாய்ப்படும் ஆண்டொன்றுக்கு உயர்வான 0.5 சதவீதத்துக்கு மிகக்கிட்டியதாக நேர்த்தியாக்கப்பட்டு சராசரி எடைவீதமளிக்கப்பட்ட பிரதான கடன்கொடுக்கும் வீதத்துக்குமேல் (சஎபிவீ) ஆண்டொன்றுக்கு எட்டுச் சதவீத (ஆண்டொன்றுக்கு 8.0%) வட்டியையும் அல்லது விற்பனை செய்யப்படும் நேரத்தில் செலுத்தப்படாதெஞ்சியுள்ள அதன் ஏதேனும் பாகத்தினையும் கீழே விபரிக்கப்படும் காணியையும், கட்டிடத்தையும், விளம்பரப்படுத்துவதற்கான செலவுகள், விற்பதற்கான செலவுகள், செலவிடப்பட்ட மற்றெல்லாப் பணங்கள், செலவுதொகைகள், மற்றும் வேறு இறுப்பனவுகள் என்பவற்றோடு சேர்த்து அறவிடுவதற்காக மேற்கூறப்பட்ட ஈட்டுமுறியின்மூலம் திரு. பொடியப்பு புண்ணியராஜா மற்றும் திருமதி பரமலிங்கம் சந்திரகலா என்போரினால் டீஎவ்சீசீ வங்கி பீஎல்சீக்கு ஈடுவைக்கப்பட்ட சொல்லப்பட்ட காணியும், வளவுகளும், கொழும்பைச் சேர்ந்த உத்தரவுபெற்ற ஏலதாரர் திருவாளர் ஷொக்மன் அன்ட் சமரவிக்ரம அவர்களினால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவேண்டுமென இத்தால் தீர்மானிக்கின்றது.".*

**289 ஆம் இலக்க ஈட்டுமுறிமூலம் ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்**

*கிழக்கு மாகாணம், மட்டக்களப்பு மாவட்டத்தில், ஏறாவூர் பத்து - செங்கலடி பிசே பிரிவில், ஏறாவூர் பத்து - செங்கலடி பிரதேசசபை எல்லைகளில், செங்கலடி கிஅ பிரிவில், செங்கலடிக் கிராமத்தில் அமைந்துள்ளதும் பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும்: பரப்பளவில் இது, வடக்கிலிருந்து தெற்குவரை 48 அடி மற்றும் கிழக்கிலிருந்து மேற்குவரை 96 அடி: இது அண்மையில் நில அளவையிடப்பட்டு உ. நி., வீ. ராஜேந்திரன் என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2009.09.24 ஆந் தேதிய R/535/2009 ஆம் இலக்க வரைபடத்தில் மேலும் விபரமாக குறித்துக்காட்டப்பட்டு விவரிக்கப்பட்டது : பரப்பளவில் இது, பதினாறு தசம் மூன்று மூன்று பேர்ச் (0ஏ. 0றூ. 16.33பே.) கொண்டுள்ளதுடன் அதன் எல்லைகள் பின்வருமாறு :- வடக்கு: கே. கோணேஸ்வரியினால் உரிமைகோரப்பட்ட காணி, கிழக்கு: பிரதான வீதி, தெற்கு, மேற்கு : இக்காணியின் எஞ்சியுள்ள பங்கு, இதுவும் அதன்கண் அடங்கியுள்ள கட்டிடமும் மற்றெல்லா உரிமைகளும்.*

*மிக்க அண்மைய நிலஅளவையின்படி சொல்லப்பட்ட காணி பின்வருமாறு விவரிக்கப்படுகின்றது :-*

*கிழக்கு மாகாணம், மட்டக்களப்பு மாவட்டத்தில், ஏறாவூர் பத்து - செங்கலடி பிசே பிரிவில், ஏறாவூர் பத்து - செங்கலடி பிரதேசசபை எல்லைகளில், செங்கலடி கிஅ பிரிவில், செங்கலடிக் கிராமத்தில்*

அமைந்துள்ளதும் உநி, கே. கமலநாதன் என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2015.10.05 ஆந் தேதிய KK/BT/2015/500 ஆம் இலக்க நிலஅளவை வரைபடத்தில் காணித்துண்டம் இல. 01 என விவரிக்கப்பட்டு குறித்துக்காட்டப்பட்டதும் பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும்: பரப்பளவில் இது, 0.0389 ஹெக்டேயர்களை அல்லது பதினைந்து தசம் மூன்று ஏழு பேர்ச் (0ஏ, 0றூ. 15.37பே.) கொண்டுள்ளதுடன் அதன் எல்லைகள் பின்வருமாறு– வடக்கு : கே. கோணேஸ்வரியினால் உரிமைகோரப்பட்ட காணி; கிழக்கு : வீதி (வீதி அபிவிருத்தி அதிகாரசபை); தெற்கு : உரிமைகோரப்பட்ட காணி ; மற்றும் மேற்கு : கே. தங்கத்தினால் உரிமைகோரப்பட்ட காணி, இதுவும் அதன்கண் அடங்கியுள்ள கட்டிடமும் மற்றெல்லா உரிமைகளும்.

லக்ஷ்மன் சில்வா,
பிரதான நிறைவேற்றலுவலர்.

டீஎவ்சீசீ வங்கி பீஎல்சீ,
இல. 73/5, காலி வீதி,
கொழும்பு 3.

3 - 108

---

## ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ - பொரள்ளை கிளை

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04 ஆம் பிரவின் கீழ் ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல். சீ பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்

சக்கேத்த விஜயதாச பட்டன்கல

ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ பணிப்பாளர்கள் சபையினால், 2017, ஒகத்து 3 ஆந் திகதி நடத்தப்பட்ட கூட்டம் ஒன்றில் விசேடமாகவும், ஏகமனதாகவும் எடுக்கப்பட்ட தீர்மானம்.

“சக்கேத்த விஜயதாச பட்டன்கல கடப்பாடு உடைய வராகவும், ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ சார்பில், கொழும்பு பிரசித்த நொத்தாரிசு எஸ். ஆர் பாயிசினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2014, சனவரி 02 ஆந் திகதியிடப்பட்ட 2099 ஆம் இலக்க முறி, மீதான வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார் ஆதலாலும், 2017, யூலை 03 ஆந் திகதியன்று உள்ளவாறாக ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ தாபனத்திற்கு சொல்லப்பட்ட முறி மீது எழுபது இலட்சத்து எட்டாயிரத்து எண்ணூற்று இருபத்திரண்டு ரூபா இருபது சதம் (ரூபா 70,08,822.20) கொண்ட பணத்தொகை ஒன்று தற்போது வருமதியாகவும், சேர்மதியாகவும் உள்ளதாலும், அத்துடன் ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி பணிப்பாளர்கள் சபையானது, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இதற்கான அட்டவணையில் முழுமையாக விபரிக்கப்பட்டுள்ள 2099 ஆம் இலக்க முறி மூலம் ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. தாபனத்திற்கு ஈடுவைக்கப்பட்டனவுமான ஆதனமும் வளவுகளும் சொல்லப்பட்ட எழுபது இலட்சத்து எட்டாயிரத்து எண்ணூற்று இருபத்திரண்டு ரூபா இருபது சதம் (ரூபா 70,08,822.20) பணத்தொகையை 2017, யூலை 04 ஆந் திகதியிலிருந்து விற்பனை நாள்வரை மேலும் வட்டியுடனும், விளம்பரச் செலவுகள் மற்றும் கூறப்பட்ட வேறு இறுப்பனவுகள் ஆகியவற்றோடும் சேர்த்து (பெறப்பட்ட கொடுப்பனவுகள் எவையும் இருந்தால் அவற்றைக் கழித்து) அறவிடுவதற்காக தீவு முழுவதற்குமான உரிமம் பெற்ற ஏல விற்பனையாளர் டலஸ் கெலாட்டினால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படுதல் வேண்டும் என இத்தால் தீர்மானக்கின்றது.”.

### அட்டவணை

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தில் உள்ள ஹேவாகம் கோறளையில் பள்ளேபற்றுவில் உள்ள கடுவெல மாநகர சபை எல்லைக்கு உட்பட்ட கடுவெல பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள தலங்கம வடக்கு ஏ இலக்கம் 477 கிராம அலுவலர் பிரிவில் உள்ள தலங்கம வடக்கில் உள்ள 585/5 வரிமதிப்பீட்டிலக்கத்தைக் கொண்டுள்ள தெல்கஹாவத்த என அழைக்கப்படும் காணியுடனான கட்டடங்கள் மற்றும் அத்துடனான எல்லாம். உரிமம் பெற்ற நிலஅளவையாளர் எச். கே. மஹந்தவினால் தயாரிக்கப்பட்ட 2004.5.21 ஆந் திகதியிடப்பட்ட 2145 ஆம் இலக்க வரைபடத்தில் விபரமாக விளக்கப்பட்டுள்ள காணித்துண்டு 14 என அடையாளம் இடப்பட்ட பிரிக்கப்பட்ட மறறும் வரையறுக்கப்பட்ட பகிரப்பட்ட காணியின் எல்லைகள் - வடக்கு : 2124 ஆம் இலக்க வரைபடத்தில் உள்ள காணித்துண்டு 13 மற்றும் காணித்துண்டு பி ; கிழக்கு : 2124 ஆம் இலக்க வரைபடத்தில் உள்ள காணித்துண்டு பி மற்றும் 21 ; தெற்கு : காணித்துண்டு 21, 15 மற்றும் 12 ; மேற்கு : காணித்துண்டுகள் 11 மற்றும் 13 அத்துடன் சொல்லப்பட்ட 2145 ஆம் இலக்க வரைபடத்திற்கு அமைவான பத்து பேர்ச் (0ஏ. 0றூ. 10பே.) விஸ்தீரணமான ஆதனம். ஹோமாகம மாவட்ட காணிப் பதிவகத்தில் ஜி1472/265 என்ற தலைப்பின் கீழ் பதிவு செய்யப்பட்டது.

அத்துடன் முன் சொல்லப்பட்ட அடகு முறி இலக்கம் 2099 இன் இரண்டாம் அட்டவணையில் மேலதிகமாக விபரிக்கப்பட்டதற்கு அமைவான பாதை உரிமையுடன் சேர்த்து.

சபையின் கட்டளைப்படி,

கே. ஏ. எல். ரி. ரணவீர,
பி.பொ.மு. (சட்டம்)/சபைச் செயலாளர்.

3-156/2

**ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ - கிரிபத்கொடை கிளை**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04 ஆம் பிரவின் கீழ் ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்*

பொன்னம்பெருமகே டொன் ஆனந்த சரத் பொன்னம்பெருமகே டொன் மாலிந்த தருஷா அசங்க

*ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ பணிப்பாளர்கள் சபையினால், 2017, ஒற்றோபர் 26 ஆந் திகதி நடத்தப்பட்ட கூட்டம் ஒன்றில் விசேடமாகவும், ஏகமனதாகவும் எடுக்கப்பட்ட தீர்மானம்.*

*''பொன்னம்பெருமகே டொன் ஆனந்த சரத் பொன்னம்பெருமகே டொன் மாலிந்த தருஷா அசங்க கடப்பாடு உடையவர்களாகவும், ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ சார்பில், கொழும்பு பிரசித்த நொத்தாரிசு யூ. எஸ். கே. ஹேரத்தினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2014, பெப்புருவரி 24 ஆந் திகதியிடப்பட்ட 4932 ஆம் இலக்க முறி, மீதான வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார்கள் ஆதலாலும், 2017, செத்தெம்பர் 20 ஆந் திகதியன்று உள்ளவாறாக ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ தாபனத்திற்கு சொல்லப்பட்ட முறி மீது ஐம்பத்து இரண்டு இலட்சத்து தொண்ணூற்று ஐந்தாயிரத்து எழுநூற்று எண்பத்து ஏழு ரூபா ஏழு சதம் (ரூபா 52,95,787.07) கொண்ட பணத்தொகை ஒன்று தற்போது வருமதியாகவும், சேர்மதியாகவும் உள்ளதாலும், அத்துடன் ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி பணிப்பாளர்கள் சபையானது, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இதற்கான அட்டவணையில் முழுமையாக விபரிக்கப்பட்டுள்ள 4932 ஆம் இலக்க முறி மூலம் ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல். சீ. தாபனத்திற்கு ஈடுவைக்கப்பட்டனவுமான ஆதனமும் வளவுகளும் சொல்லப்பட்ட ஐம்பத்து இரண்டு இலட்சத்து தொண்ணூற்று ஐந்தாயிரத்து எழுநூற்று எண்பத்து ஏழு ரூபா ஏழு சதம் (ரூபா 52,95,787.07) பணத்தொகையை 2017, செத்தெம்பர் 21ஆந் திகதியிலிருந்து விற்பனை நாள்வரை மேலும் வட்டியுடனும், விளம்பரச் செலவுகள் மற்றும் கூறப்பட்ட வேறு இறுப்பனவுகள் ஆகியவற்றோடும் சேர்த்து (பெறப்பட்ட கொடுப்பனவுகள் எவையும் இருந்தால் அவற்றைக் கழித்து) அறவிடுவதற்காக தீவு முழுவதற்குமான உரிமம் பெற்ற ஏல விற்பனையாளர் எல். பி. சேனாநாயக்காவினால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படுதல் வேண்டும் என இத்தால் தீர்மானக்கின்றது.''.*

**அட்டவணை**

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டத்தில் உள்ள அளுத்குறு கோறளவின் ராகம் பற்றுவில் உள்ள வத்தளை பிரதேச சபையின் எல்லைக்கு உட்பட்ட வத்தளை பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் 182ஏ மகுல்பொக்குன கிராம அலுவலர் பிரிவிற்கு உட்படட்ட வெலிசரவில் உள்ள மகுல்பொக்குன வீதி 67/8 வரிமதிப்பீட்டிலக்கத்தைக் கொண்டுள்ள மகுல்பொக்குன என அழைக்கப்படும் காணியுடனான கட்டடங்கள், மற்றும் அத்துடனான எல்லாம் உரிமம் பெற்ற நிலஅளவையாளர் எஸ். ஜி. குணதிலகவினால் தயாரிக்கப்பட்ட 2004, பெப்புருவரி 25 ஆந் திகதியிடப்பட்ட 2950 ஆம் இலக்க வரைபடத்தில் விபரமாக விளக்கப்பட்டுள்ள காணித்துண்டு 6ஏ எனஅடையாளம் இடப்பட்ட பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட பகிரப்பட்ட காணியின் எல்லைகள் - வடக்கு: அரச குடியிருப்பாக முன்னர் இருந்தகாணி ; கிழக்கு : காணித்துண்டு 7 ; தெற்கு : காணித்துண்டு 30 (20 அடி அகலமான வீதி) ; மேற்கு : காணித்துண்டு 6 இன் மிகுதியான பகுதி. அத்துடன் சொல்லப்பட்ட வரைபட இலக்கம் 2950 இற்குஅமைவான பதினைந்து பேர்ச் (0ஏ. 0றூ. 15பே.) விஸ்தீரணமானது. கம்பஹா மாவட்ட காணிப் பதிவகத்தில் பி550/202 என்ற தலைப்பின் கீழ் பதிவு செய்யப்பட்டது.

அத்துடன் உரிமம் பெற்ற நிலஅளவையாளர் எம். டபிள்யூ. ஓ. பீ. விஜயசிங்கவினால் தயாரிக்கப்பட்ட 1974. பெப்புருவரி 13 ஆந் திகதியிடப்பட்ட 707 ஆம் இலக்க வரைபடத்தில் விபரமாக விளக்கப்படடுள்ள காணித்துண்டு 30 (வீதிக்கான ஒதுக்கீடு) என அடையாளம் இடப்பட்ட வீதிக்கான ஒதுக்கீடு மீதான உரிமையும் கொண்டது.

சபையின் கட்டளைப்படி,

கே. ஏ. எல். ரி. ரணவீர,
பி.பொ.மு. (சட்டம்)/சபைச் செயலாளர்.

3-156/3

---

**இலங்கை வங்கி**

*1968 ஆம்ஆண்டின் 34 ஆம் இலக்கச்சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் (397 ஆம் அத்தியாயம்) 21 ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்படும் அறிவித்தல்*

*21.12.2017 இல் நடைபெற்ற கூட்டமொன்றில் இவ்வங்கி பணிப்பாளர் சபை விஷேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானித்ததாவது:-*

*1. பிரசித்த நொத்தாரிசு ஆர். எம். கே. எஸ்.எம். ரத்நாயக்கா அத்தாட்சிப்படுத்திய 20.11.2012 ஆந் திகதியிட்ட ஈட்டுமுறி இல. 2515 இன் பேரில் அம்பன்பொல, தெத்தாவ, அநுராதபுரம் வீதியில் அமைந்த திருவாளர்கள் மக்மா பார்(ர்) மஸ் (பிறைவேட்) லிமிட்டெட்டிடமிருந்து 2017.10.19 ஆந் திகதி வரை முதலும் வட்டியும் ஒரு கோடியே நாற்பத்தெட்டு இலட்சத்துஇருபத்தொன்பதாயிரத்து முந்நூற்று எண்பத்தேழு ரூபா பத்து சதம் (ரூபா. 1,48,29,387.10) அத்துடன் கடன்*

வசதி மீதான தீர்க்காத மூலதனம் ஒரு கோடி ரூபா (ரூபா. 1,00,00,000) ஆண்டுக்கு (11.82%) வீதத்தில் 20.10.2017 தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை மேலும் வட்டியும் வங்கிக்கு வருமதியாக உள்ளதாலும்;

2. பிரசித்த நொத்தாரிசு ஆர். எம். கே. எஸ்.எம். ரத்நாயக்கா அத்தாட்சிப்படுத்திய 20.11.2012 ஆந் திகதியிட்ட மேற்குறிப்பிட்ட ஈட்டுமுறி இல. 2515 இன் பேரில் கடன் வசதி மீது வருமதியாக உள்ள மேற்குறிப்பிட்டஒரு கோடியே நாற்பத்தெட்டு இலட்சத்துஇருபத்தொன்பதாயிரத்து முந்நூற்று எண்பத்தேழு ரூபா பத்து சதமும் (ரூபா. 1,48,29,387.10) அத்துடன் 20.10.2017 தொடக்கம் விற்பனைத் திகதி வரை மேற்குறிப்பிட்டவாறு வட்டியும் இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் 26 ஆம் பிரிவின் கீழ் அறவிட வேண்டிய செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த இலங்கை வங்கிக்கு ஈடுவைத்த சொத்தை பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் 19ஆம் பிரிவு (397 ஆம் அத்தியாயம்) மற்றும் திருத்தங்களுக்கமைய கண்டி, டொறிங்டன் வீதி,இல. 24 ஐச் சேர்ந்த திருவாளர்கள் சொக்மன் மற்றும் சமரவிக்ரம ஏல நிறுவனத்தின் ஏலதாரருக்கும் இலங்கை வங்கி, கல்கமுவக் கிளை முகாமையாளருக்கும் இத்தால் அனுமதியும் அதிகாரமும் வழங்கப்படுகின்றது.".

**அட்டவணை**

வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டம்,வன்னி ஹத்பற்று ஹதலிஸ்பஹ கிழக்கு கோரளையில் கல்கமுவ பிரதேச சபை எல்லைகளுள் அஹட்டுவெவ பிரதேச செயலாளர் பிரிவில் ஈரியாவ, 129 ஆம இலக்க கிராம அலுவலர் பிரிவில் ஈரியாவையில் அமைந்ததும் உத்தரவுபெற்ற நிலஅளவையார் பீ.ஜீ. பந்துதிலக்க தயாரித்த 2011,ஒகத்து 15 ஆந் திகதியிட்ட வரைபடம் இல. 18678/ 2011 இல் துண்டு 01 என விபரித்த கனேயாய என அழைக்கப்படும் பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு - வடக்கு : ஆர். எம். முதியான்சே உரிமைகோரும் காணியும் ; கிழக்கு:கிராம சபை பாதையும் ; தெற்கு : அதரகல்ல டாங்கும் ; மேற்கு: உல்பத்தே எல்லை உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் பி. ஜி. பந்துதிலக்க தயாரித்த வரைபட இல. 4850/99 இல் துண்டு இல. 1 உம் எல்லைகளாகக் கொண்டு ஐந்து ஏக்கர் (5ஏ.0றூ. 0பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள மரங்கள், பயிர்கள், கட்டிடங்கள் மற்றும் சகலதும் ஆகும். இது நிக்கவெரட்டிய காணிப் பதிவகத்தில் J 01/ 244இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட அட்டவணை ஒழுங்காக உள்ளது.

இலங்கை வங்கி பணிப்பாளர் சபை கட்டளைப்படி,

திரு. டபிள்யூ. எம். ஆர். வீரசிங்ஹ,
முகாமையாளர்.

இலங்கை வங்கி
கல்கமுவ.

3-184

**அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய புதிய விகிதங்கள்**
**2013 சனவரி 01 ஆந் திகதி தொடங்கி அமுலுக்கு வந்தது**
**"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை"**
**(வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது.)**

**எல்லா வர்த்தமானிகளையும்** www.documents.gov.lk **எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவார்.

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் **அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8** அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. அலுவலக நேரம் மு. ப. 8.30 மணி முதல் பி. ப. 4.15 மணி வரையாகும்.

4. பணம் கொடுக்கல் வாங்கல் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 3.00 மணிவரை நடைபெறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படுதல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும். தபால் அலுவலகம், "பொரல்லை" என்பதே மணி ஓடர்களுக்கான செலுத்தப்படும் அலுவலகமாகும்.

6. **நகலைக் கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் ரைப் அடித்தல்** பிழைகளையும் காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும். கையெழுத்துப் பிரதி எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும் பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்பட வேண்டிய விளம்பரங்கள் 'சுப்றீம் கோட்' புறொக்டரால் கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்பட மாட்டா.

10. அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு :-

| | ரூபா ச. |
|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | 13700 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலமும் அல்லது அதன் பகுதிக்கும் | 13700 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் அரை பக்கம் | 1,30000 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | 2,60000 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி** வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **ஒவ்வொரு மாதமும் முதற்கிழமை வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் "அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8" அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.**

13. **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பெறப்படாமை, முகவரி மாற்றம் போன்ற எல்லாத் தொடர்புகளுக்கும், கொழும்பு 8, அரசாங்க அச்சுத் திணைக்களம், அரசாங்க அழுத்தகருக்கே எழுதுங்கள்.**

14. **2013 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து மீளவாய்ந்த புதிய சந்தா விபரம் :-**

| இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | முழு வருடத்திற்கு மான கட்டணம் ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வதுதொகுதி | 4,160.00 | 9,340.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 580.00 | 950.00 |
| III வது தொகுதி (ஆக்க உரிமை மற்றும் வியாபார உரிமை அடையாள விளம்பரங்கள் முதலியன) | 405.00 | 750.00 |
| I வது பகுதி முழுவதும் (I, II, III தொகுதிகள் உட்பட) | 890.00 | 2,500.00 |
| II ஆவது பகுதி (சட்ட சம்பந்தமானது) | 860.00 | 450.00 |
| III வது பகுதி (காணிகள்) | 260.00 | 275.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 2,080.00 | 4,360.00 |
| V வது பகுதி (பயண போக்குவரத்து சேவை முதலிய விண்ணப்பங்களுக்கான பட்டியல் மற்றும் புத்தகப் பட்டியல்) | 1,300.00 | 3,640.00 |
| VI வது பகுதி (யூரிமார் பெயர்ப்பட்டியல், வைத்திய அலுவலர் பட்டியல், பிறப்பு, இறப்பு பதிவாளர் பட்டியல் முதலியன) | 780.00 | 1,250.00 |
| அதிவிசேட வர்த்தமானி | 5,145.00 | 5,520.00 |

**முழு ஆண்டின் இறுதி வரைக்கும் பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாத காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.**

**தனிப்பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்**

| | ரூபா ச. விலை ரூபா ச. | ரூபா ச. தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வதுதொகுதி | 4,160.00 | 9,340.00 |
| I வது தொகுதி | 40.00 | 60.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 25.00 | 60.00 |
| III வது தொகுதி | 15.00 | 60.00 |
| I வது பகுதி (I, II, III தொகுதிகள் உட்பட) | 80.00 | 120.00 |
| II வது பகுதி | 12.00 | 60.00 |
| III வது பகுதி | 12.00 | 60.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 23.00 | 60.00 |
| V வது பகுதி | 123.00 | 60.00 |
| VI வது பகுதி | 87.00 | 60.00 |

**எல்லா தனிப்பிரதிகளையும் கொழும்பு 5, பொல்ஹேன்கொடை, கிருளப்பனை மாவத்தை, இல. 163 எனும் முகவரியிலுள்ள அரச வெளியீட்டு பணியகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.**

# வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்பட மாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

***அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்களை ஏற்றுக்கொள்வார்.***

***முக்கிய கவனிப்பு.***- இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான கட்டணங்கள் யாவும் ***அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.***

***அட்டவணை-2018***

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|---|---|
| **மாச்சு** | .. | வெள்ளி | 02.03.2018 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 16.02.2018 |
| | | வெள்ளி | 09.03.2018 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 23.02.2018 |
| | | வெள்ளி | 16.03.2018 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 02.03.2018 |
| | | வெள்ளி | 23.03.2018 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 09.03.2018 |
| | | வியாழன் | 29.03.2018 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 16.03.2018 |
| **ஏப்பிறல்** | .. | வெள்ளி | 06.04.2018 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 23.03.2017 |
| | | வியாழன் | 12.04.2018 | .. | நண்பகல் 12 | வியாழன் | 29.03.2017 |
| | | வெள்ளி | 20.04.2018 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 06.04.2018 |
| | | வெள்ளி | 27.04.2018 | .. | நண்பகல் 12 | வியாழன் | 12.04.2018 |
| **மே** | .. | வெள்ளி | 04.05.2018 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 20.04.2018 |
| | | வெள்ளி | 11.05.2018 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 27.04.2018 |
| | | வெள்ளி | 18.05.2018 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 04.05.2018 |
| | | வெள்ளி | 25.05.2018 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 11.05.2018 |

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2018 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.